
# விடுதலைப்புலிகள்

குரல்: 57 வைகாசி 1995 அன்பளிப்பு: ரூபா 5/-

## உள்ளே


* அமைதி வேடம் கலைந்துவிட்டது - கருத்து விளக்கம்
* மேற்குலகின் இராஜதந்திரம் - நிலைப்பாடு
* வெளிநாட்டுப் படை திரும்பவும் வருமா? - மக்கள் களம்
* தாய்நிலத்தைக் காதல் செய் - உலைக்களம்
* பலம்தான் வாழ்வு - போர்க்களம்
* வீறுநடை போடும் விடுதலைப் போர் - உசாவல்
* இந்திய அழுத்தமும் தலைவரின் உறுதியும் - வரலாறு




தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

# வேடம் கலைந்துவிட்டது!

"ஜனநாயகம், மனிதாபிமானம், இன சமத்துவம்" என்று தான் அணிந்த முக மூடிகளைச் சந்திரிகா அம்மையார் தானே கழற்றி எறிந்து, இப்போது, தன்னுடைய உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்தி விட்டார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய காலத்திலேயே போருக்கான தயாரிப்புக்களைத் தான் செய்ததாக, இப்போது, சந்திரிகா அம்மையார் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளார்! ஐ. தே. க. அரசு செய்ததைவிடப் போர்த் தயாரிப்பைத் தனது அரசு (சமாதான காலத்தில்) திறம்படச் செய்துள்ளது என்று - ரூபவாகினிக்கு அளித்த செவ்வியில் - சந்திரிகா அம்மையார் பெருமிதம் தெரிவித்துள்ளார். படைக்கு ஆட்களைச் சேர்த்து - தகுந்த ஆயுதங்களைக் கொள்வனவுசெய்து - படை பலத்தை வளர்த்ததாகப் பெருமை பாராட்டியுள்ளார்.

போருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து ஆட்சிக்குவந்த சந்திரிகா அம்மையார், புலிகளுடன் சமாதானப் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டே போர்த் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளார். இந்த முரண்நிலையை எப்படி அழைப்பது ? நயவஞ்சகம் என்பதா ! அல்லது புத்திஜீவிப் பேரினவாதம் என்பதா ? எப்படி அழைத்தாலும் அது புலிகள் இயக்கத்திடம் எடுபடவில்லை என்பது, தமிழ் இனத்திற்கு மனநிறைவைத் தந்துள்ளது.

சமாதானப் பேச்சில் சந்திரிகா அரசு காட்டிய அசமந்தப் போக்கை - நேர்மை இன்மையை - புலிகள் இயக்கம் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தது அன்று சந்திரிகா அரசு மீது புலிகள் இயக்கம் சுமத்திய குற்றச்சாட்டுக்களை ஏற்பது போல, இன்று அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் !; உண்மையை உரைத்ததற்கு அவருக்கு எமது நன்றிகள்.

பேச்சுவார்த்தைகளில் இணக்கங் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் ஏற்பட்ட தாமதத்திற்கு நிருவாக ரீதியான நடைமுறைப் பிரச்சினைகள்தான் காரணம் என, அரசு சார்பில் சொல்லப்பட்டிருந்தது. அந்த அசிரத்தைக்கு உண்மையான காரணம் எது என்று, இப்போது சந்திரிகா அம்மையாரின் 'ரூபவாகினி' செவ்வியிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. இதேபோல, பூநகரி முகாமை அப்புறப்படுத்தி ஒரு பாதை திறப்பதற்கு அரசு மறுத்ததின் பின்னால் இருந்த இராணுவ நோக்கத்தை இப்போது, சாதாரண மக்களும் விளங்கிக்கொண்டிருப்பார்கள்.

"சமாதானப் பேச்சு" என்ற போர்வையிலான சிங்கள அரசின் போர்த் தயாரிப்பைத் தொடர புலிகள் இயக்கம் அனுமதித்திருக்குமானால், இன்று நிலைமை எப்படி இருந்திருக்கும் என்று, எமது மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இவை ஒருபுறம் இருக்க, அண்மைக் காலமாக சந்திரிகா அம்மையார் அளித்து வரும் செவ்விகளைப் பார்க்கும்போது, அவர் ஒரு பொய்யர் என்று நிருபிக்க அவை போதுமானதாக உள்ளன.

போர் தொடங்கிய ஒருசில நாட்களிலேயே, கிளாலிக் கடற் பிரயாணத்திற்கு சந்திரிகா அரசு தடை விதித்தது. ஆனால், பின்னர் அவரைச் சந்தித்த தமிழ்க் குழுக்களிடம், "கிளாலிப் பாதைக்குத் தடை விதித்ததாக நான் கூறவில்லையே" என்று, குழந்தைத்தனமாகப் பொய் கூறியுள்ளார்.

இதேபோல, "மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை ஒரு பூரண போர்நிறுத்தமாக வளர்த்துச்செல்ல அரசு தவறிவிட்டது என்று புலிகள் குற்றம் சுமத்தி உள்ளனரே?" என செய்தியாளர் ஒருவர் கேட்டபோது, "இல்லை, அது பொய்......புலிகள் அவ்வாறு கோரவில்லை; நாங்கள்தான் அவ்வாறு கோரினோம்" என்று, இன்னொரு பெரும் பொய்யையும் வாய்கூசாமல் சந்திரிகா கூறியுள்ளார்.

மோதல் தவிர்ப்பை ஒரு நிரந்தர போர் நிறுத்தமாக மாற்ற வேண்டும் என, சந்திரிகா அம்மையாருக்குத் தலைவர் பிரபாகரன் வரைந்த கடிதத்தை, அவர் எப்படி உலகின் கண்களிலிருந்து ,மறைக்கப்போகின்றார்!

சந்திரிகா அம்மையார் ஒரு பொய்யராக இருப்பது மட்டுமல்ல, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், மனிதநேயமற்ற ஒரு கொடுங்கோல் ஆட்சியாளராகவும் மாறியுள்ளார்.

தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதித்து, அவர்களைத் துன்புறுத்திய செயலிற்காக ஐ. தே. கட்சி அரசை விமர்சித்த சந்திரிகா அம்மையார், இப்போது என்ன செய்கின்றார்? ஐ. தே. கட்சி அரசு அமுல்படுத்திய பொருளாதாரத் தடையை மேலும் கடுமையாக இறுக்கி, தமிழ் மக்களை வதைக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்! மனிதாபிமானமற்ற இந்தக் கொடுஞ் செயல் சந்திரிகாவின் உண்மை முகத்தை - தமிழ் இன விரோத சிந்தனையை - அப்பட்டமாகக் காட்டியுள்ளது.

உண்மையில், சந்திரிகா அம்மையாரின் இன சமத்துவப் பார்வையும், மனிதாபிமானக் கண்ணோட்டமும், ஜனநாயக சிந்தனையும் சொல்லளவில் மட்டும்தான்! செயலில் அல்ல! ○

# வீர நடைபோடும் விடுதலைப் போர்

'மூன்றாம் ஈழப்போர்' ஆரம்பமாகி, ஐந்து வாரங்கள் நிறைவடைந்துவிட்டன. எனினும், இந்தக் குறுகிய காலத்தில் சிங்களப் படை சந்தித்த இழப்புக்களால், சிங்கள தேசம் அதிர்ந்துபோய் உள்ளது இரண்டு பீரங்கிக் கப்பல்கள் இரண்டு விமானங்கள் என்பவற்றுடன், 300 இற்கும் அதிகமான படையினரையும் சிங்கள அரசு இழந்துவிட்டது.

இந்த நிலையில், புலிகள்மீது போர் தொடுக்க வேண்டும் என்ற ஆவேசக் கூச்சல்களுக்கும் மேலாக, 'வடபுல முகாங்களிலுள்ள படையினரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்ற அச்சம் தொனிக்கும் குரல்களே, சிங்கள தேசத்திலிருந்து கேட்கின்றன. புலிகளின் தற்போதைய படைய வளர்ச்சிபற்றி சிங்களப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்த்து, சிங்கள தேசம் பீதியடைகின்றது என, கொழும்பிலுள்ள சில அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர் போர் தொடங்கிய நாளில் இருந்து இன்றுவரை, நாளொன்றிற்கு 10 படையினர் என்ற வீதத்தில் பலியாகிவருகின்றனர். மூன்றாம் ஈழப்போரின்' ஆரம்பமே, சிங்கள தேசத்தில், பரவலாக படையினரின் மரண நிகழ்ச்சிகளை நடாத்திவிட்டது.

தென்தமிழீழப் போர்க்களத்தைப் பொறுத்தவரையில் புலிவீரர்களின் இடைவிடாத் தரைத் தாக்குதல்கள், சிங்களப் படைக்கு பல வகையிலும் தலையிடியைக் கொடுத்துவருகின்றன 'படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கிழக்கு மாகாணம் இருக்கின்றதா?' என்ற கேள்வியை எழுப்பிவிடுவதுடன், கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள படையினரின் மனநிலையையும் இந்தத் தொடர் தாக்குதல்கள் பாதித்துள்ளன. "கிழக்கில் பணிபுரிந்த சிங்களப் பொலிசாரில் 100 பேர் கடமைக்குச் செல்லாதுவிட்டுள்ளனர்" என்ற செய்தி, மேற்குறித்த விடயத்தை உறுதிப்படுத்தப் போதுமானதாக உள்ளது. மேலும், படை முகாங்களில் இருந்து நடைபெறும் ரோந்துகள் வழிமடக்கித் தாக்கப்பட்டு ஏறக்குறைய முற்றுமுழுதாகவே அழிக்கப்படுவதால், படையினர் முகாங்களுக்குள் முடங்க வேண்டிய நிலையும் எழுந்துள்ளது; இது சிங்களப் படைகளின் போரிடும் உறுதியைச் சிதைக்க வல்லது.

கிழக்கு மாகாணத்தில் தரைப் படையினரின் மனஉறுதி சிதைபடுவதை, சிங்களப் பேரினவாதம் தாங்கிக்கொள்ள மாட்டாது. அதனால்தான், தனது இழப்புக்களுக்குப் பழிவாங்கும் முகமாக - முன்னரைப்போல - அப்பாவித் தமிழர்களைப் படுகொலைசெய்யத் தொடங்கியுள்ளது.

புலிவீரர்களால் மேற்கொள்ளப்படும் தரைத் தாக்குதல்களாலும், கடற் தாக்குதல்களாலும் தென் தமிழீழப் போர்முனை அதிர்ந்தபடி உள்ளது. அதேவேளை, புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவின் செயற்பாட்டைத் தொடர்ந்து, வடதமிழீழ வான்பரப்பு வெறிச்சோடிப்போய்க் கிடக்கின்றது.

விமான எதிர்ப்பு ஆற்றலை புலிகள் இயக்கம் பெற்றதைக் கண்ணாரக் கண்டபின், ஒருவகைப் பீதிநிலையில் - இன்று சிங்களத் தேசம் இருக்கின்றது "இதை அரசு எவ்வாறு சமாளிக்கப் போகின்றது?", "அதற்காக அரசு எந்தவகை ஆயுதங்களை வாங்கப்போகின்றது?" என்ற கதையே, சாதாரண சிங்கள மக்களின் அன்றாடக் கதையாக மாறிவிட்டது என, கொழும்புப் பத்திரிகை ஒன்று எழுதி உள்ளது.

இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டபின் சிங்களப் போர் விமானங்களுக்கு மட்டும் ஆபத்து வரவில்லை; சிங்கள வான்படைக்கே சோதனை ஏற்பட்டுள்ளது. அதாவது, விமானங்களை ஓட்ட விமானிகள் மறுத்துவருவதையே இங்கு குறிப்பிடுகின்றோம். விமானப் படை விமானிகளின் இந்தப் 'பகிஷ்கரிப்பு' சிங்கள அரசுக்கு பல விதத்தில் தலையிடியினைத்

(12ஆம் பக்கம் பார்க்க)

# மேற்குலகின் இராஜதந்திரமும் புலிகளின் நிலைப்பாடும்

சமாதானப் பேச்சிலிருந்து புலிகள் இயக்கம் விலகிக்கொண்டதையிட்டு, பல மேற்குலக நாடுகள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. நிலைமைகளை ஆராயாமல் - அவசரப்பட்டு, புலிகளிற்கு எதிராகத் தெரிவிக்கப்பட்ட இந்தக் கண்டனம், உண்மையில் கவலைதரக்கூடிய ஒரு விடயமாகும். அத்துடன் இந்த நிலைப்பாடு ஏற்படுத்தப்போகும் விளைவுகள், இலங்கைவாழ் மக்களின் எதிர்கால அரசியலில் பாதிப்பையும் - குழப்பத்தையும் உண்டுபண்ணலாம் என்று அஞ்சப்படுகின்றது.

புலிகள் மீது கண்டனக் கணைகளை வீசிய அதேவேளை, சிறிலங்கா அரசை ஆதரித்துப் புகழ்ந்துரைத்த மேற்கு நாட்டு அரசுகளின் செயல், நிச்சயமாக, நிதானமற்ற நிலையில் எடுக்கப்பட்ட குழப்பகரமான ஒரு அரசியல் நகர்வு என்பதில் ஐயமில்லை.

வன்முறை அரசியலுக்குத் தீர்வுகாண முயன்ற ஒரு சமாதானப் பேச்சு இடைநடுவில் கைவிடப்படுவதை, உலகில் எந்த ஒரு மனிதனும் விரும்பமாட்டான். அந்தளவுக்கு சமாதானம் என்பது மனிதகுலத்தால் நேசிக்கப்படுகின்றது. பகைமைகொண்டு போரிட்ட இரண்டு தரப்பினர், சமாதானத்தை நிலைநாட்டும் இலட்சியத்துடன் ஒரு பேச்சுவார்த்தையில் பங்குகொள்வது என்பது இயல்பே. ஆயினும், பேச்சுவார்த்தைகளில் பங்குபெற வேண்டும் என்ற முடிவை, எந்தத் தரப்பும் கண்ணைமூடிக்கொண்டு எழுந்தமானமாக எடுக்க விரும்பாது. புறச்சூழலை நன்றாக எடைபோட்டு, அரசியல் நிலைமைகளை நுட்பமாக ஆராய்ந்து அதற்கான முடிவுகளை எடுப்பதே வழமை. மனிதகுல வாழ்வின் அனைத்து அம்சங்களைப் போலவே, நிரந்தரமானதென்று இவ்வுலகில் எதுவுமில்லை; எல்லாமே தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருக்கின்றன. அதுவும் அரசியல் களத்தைப் பொறுத்தளவில், இன்றைய எதிரி நாளைய நண்பன் ஆகலாம்; இன்றைய வல்லரசு நாளை வலுவிழந்த அரசாக மாறலாம். இந்த நிலையற்ற உலகில், எதுவும் எப்போதும் நடக்கலாம். இந்தப் பேருண்மையை மேற்கு நாடுகளின் அரசுகளைவிட வேறு யார்தான் நன்றாக அறிந்திருப்பார்கள்? அப்படியிருந்தும், அரசு - புலிகள் அமைதிப் பேச்சு முறிவு தொடர்பான கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிக்கும்போது, மேற்குறித்த அரசியல் உண்மைகளைக் கருத்திலெடுக்க, மேற்குநாடுகள் தவறிவிட்டன.

இதேவேளை, இன்னுமொரு விடயம் பலத்த ஏமாற்றத்தை அளிக்கும் வகையில் உள்ளது. அதாவது, அரசியல் பேச்சுக்களில் ஈடுபட்ட ஒரு பகுதியினர், நடந்து முடிந்த பேச்சுக்களின் பெறுபேறுகளை எடைபோட்டு - அது திருப்தி அளிக்காத பட்சத்தில் - தமது விருப்பத்தின் பேரில் அந்தப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்ள, அவர்களுக்கு உரிமை உண்டு. புலிகளைக் கண்டிப்பதில் காட்டிய அவசரத்தில், ஜனநாயக விழுமியங்களில் ஒன்றாகிய அந்த அரசியல் உரிமையை மேற்கு நாட்டு அரசுகள் கௌரவிக்கத் தவறியதுடன், அதை மறுக்கும் நிலைக்கும் சென்றுள்ளன; இது உண்மையில் ஏமாற்றத்தை அளிப்பதாகவே உள்ளது.

இந்தநிலையில், புலிகள் இயக்கம் மீது மேற்குலகம் தொடுத்த கண்டன அறிக்கைகளுக்குப் பின்னால் ஏதாவது காரணிகள் உண்டா என்ற கேள்வியும் எழுகின்றது. இந்தக் கண்டன அறிக்கையை, வெறுமனே, ஒரு இராஜதந்திரத் தவறாகவும் குறைத்து மதிப்பிட முடியாதுள்ளது. இத்தகையதொரு கண்டன அறிக்கையால் வரும் பாதக விளைவுகள் பற்றியும், அத்தகைய அறிக்கை ஒன்றைத் தவிர்ப்பதால் வரும் நன்மைகள் பற்றியும் மேற்குலக நாடுகளுக்கு நிறைய அனுபவம் உண்டு. அப்படியாயின், அவை ஏன் அவசரப்பட்டு கண்டன அறிக்கைகளை வெளியிட்டன?

அரசு - புலிகள் பேச்சுவார்த்தை மேசையில் என்ன நடைபெறுகின்றது? அது எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது என்று, பேச்சுவார்த்தையின் போக்கை நாடிபிடித்துப் பார்க்கும் அளவுக்கு, மேற்குலக அரசுகளிடம் தகவல்கள் சென்றடையவில்லை என்றும் கூற முடியாது. அதேவேளை, தலைவர் பிரபாகரனுக்கும் - ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள், பேச்சுவார்த்தையின் போக்கையும் - அது தொடர்பாக புலிகள் இயக்கம் கொண்டிருந்த அதிருப்தியையும், சிறீலங்கா அரசின் அசமந்தப் போக்கையும் துலாம்பரமாக எடுத்துக்காட்டப் போதுமானதாக இருந்தன! அப்படியானால், பகிரங்கமாக வெளியிடப்பட்ட இந்தக் கடிதங்கள் மேற்குலக அரசுகளைச் சென்றடையவில்லை என்றும் கூறமுடியாது. அத்துடன், மேற்குலக இராஜதந்திரிகளின் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து, புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து, பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் பற்றியும், பேச்சில் புலிகள் காட்டிய அக்கறைபற்றியும் கேட்டு - அறிந்து சென்றார்களே! இந்த இராஜதந்திரிகள் தத்தமது அரசுகளுக்கு இவற்றைத் தெரிவிக்காது விட்டிருக்கவும் முடியாதே? அப்படியாயின், இந்த மேற்கு நாட்டு அரசுகள், ஏன் தங்களது நடுநிலைத் தன்மையை உதறித் தள்ளிவிட்டுப் புலிகள் இயக்கத்தைக் கண்டித்தார்கள்? பேச்சிலிருந்து வெளியேறுவது என்ற புலிகளின் முடிவு, இந்த மேற்கு நாடுகளின் தேசிய நலன்களுக்கு ஏதாவது ஊறுவிளைவித்து விட்டதா! ஒன்றைமட்டும் உறுதியாகச் சொல்லமுடியும். சிறீலங்காவில் ஒரு அரசியல் திடநிலை ஏற்படவேண்டும் என்று மேற்கு நாடுகள் விரும்பின; இதன்மூலம் தத்தம் நாடுகளில் உள்ள பல்லாயிரம் அகதிகளை மீளவும் இலங்கைக்கே திருப்பி அனுப்ப முடியும் என்றும் ஆசைகொண்டிருந்தன; அப்படி நடந்தால் அது தங்களது நாடுகளின் சமூகஉறுதிப்பாட்டுக்கு உதவி புரியும் என்றும் நம்பியிருந்தன. இத்தகையதொரு எதிர்பார்ப்பு மேலைநாட்டு அரசுகளிடம் இருந்திருந்தாலும், புலிகளிற்கு எதிரான கண்டன அறிக்கை, அவர்களது எதிர்பார்ப்பிற்கு மேலும் பாதகத்தையே கொடுக்கலாம். அத்துடன், குறித்த இந்த மேற்கு நாடுகளில் பொருளாதார நெருக்கடி இருந்தபோதிலும், இந்த அகதி மக்களுக்கு உதவும் விடயத்தால் அந்த நாடுகளின் பொருளாதாரத்திற்கு நிச்சயமாக எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அப்படியாயின் புலிகள்




இயக்கம் மீதான கண்டனத்திற்கு என்னதான் காரணமோ! சிலவேளை, முடிவில்லாமல் இழுபடும் போராலும் பேச்சுத் தோல்வியாலும் விரக்தி அடைந்த மேற்கு நாடுகள், புலிகளை மீண்டும் பேச்சிற்கு இழுப்பதற்கான ஒரு அழுத்தமாக அந்தக் கண்டனக் கணைகளைப் பயன்படுத்தியிருக்கலாமோ? இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என்ற விருப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இதைக் கருதலாமா......? அப்படியாயின், இவ்வித கண்டன அறிக்கை அந்த விருப்பைப் பிரதிபலிப்பதாக இல்லை.

உண்மையில், பேச்சுக்கள் முறிந்ததால் எழுந்த ஏமாற்றத்தையும் - அதிர்ச்சியையும் வெளிப்படுத்த, இந்த மேற்கு நாட்டு அரசுகள், மென்போக்கான இராஜதந்திர வழிகளைப் பயன்படுத்தியிருந்தால் கூடியளவு பயன் ஏற்பட்டிருக்கும். பேச்சுக்கள் முறிந்திருந்தாலும்கூட, அதை மீண்டும் ஆரம்பிக்கும் உயரிய நோக்குடன், இருதரப்பாரினதும் வாதங்களைக் கருத்திலெடுத்து, நம்பிக்கைதரும் தொனியுடனேயே இந்த மேற்கு நாடுகளின் கொள்கைப் பிரகடனம் அமைந்திருக்கவேண்டும். ''கண்டனம்'' என்ற பதத்திற்குப் பதிலாக, 'கவலை அடைந்துள்ளோம்'' அல்லது ''ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்'' என்ற சொற்பதங்களை பயன்படுத்தியிருந்தால், அது இரட்டிப்பு நன்மைகளைக் கொடுத்திருக்கும்; அதாவது, மீண்டும் பேச்சைத் தொடங்க ஊக்குவித்திருக்கும். அதேவேளை, பேச்சுத் தோல்விக்கான சரியான காரணிகளைக் கண்டறியவும் உதவியிருக்கும்.

ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. பதிலாக, புலிகளைக் கண்டித்து - அரசை ஆதரித்த மேற்குலகின் செயலானது, இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையிலான தீர்வே சாத்தியமானது என்ற கருத்தை சிங்கள அரசிடம் வலுப்படுத்தவே உதவியுள்ளது. இது, போரையும் - அழிவையும் ஏற்படுத்தி, இப்பிராந்தியத்தில் ஒரு ஸ்திரமற்ற அரசியல் - பொருளாதார நிலையைத் தோற்றுவிக்கவே உதவப்போகின்றது; அத்துடன், மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்குவதை அது அதிகதூரம் பின்தள்ளியுமுள்ளது.

**அடேல் ஆன்**

பேச்சு முறிந்த பின்னரும் சந்திரிகா அரசின் சமாதான முயற்சியைப் பாராட்டி மேற்குலகம் விடுத்த அறிக்கை, இந்த சமரசப் பேச்சு முறிந்ததில் அவருக்கு இருந்த பங்கை மூடிமறைத்து சந்திரிகா அம்மையாரை அப்பழுக்கற்ற ஒரு தலைவரைப் போலக் காட்டிவிட்டது. இந்தப் பாராட்டை, சமாதானப் பேச்சுக்குப் பதிலாக வேறு ஒரு மாற்றுத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்குலகம் கொடுத்த ஒரு சைகையாகவும் சந்திரிகா அம்மையார் எடுத்துக்கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன.

'இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறையிலேயே தீர்வு' என்ற கொள்கையை முன்னைய அரசு வலுப்படுத்தி வைத்திருந்தது; ஜனாதிபதியாக சந்திரிகா பதவியேற்ற பின்னரும் அந்த இராணுவக் கொள்கையை அவர் முழுவதுமாகக் கைவிடவில்லை. இந்த நிலையில், மேற்கு நாடுகள் விடுத்த தற்போதைய அறிக்கை. ஒரு தீவிர இராணுவவாதத்தை அமுல்படுத்த சந்திரிகாவைத் தூண்டலாம். இது இறுதியில், ஒரு பெரிய போருக்கு இலங்கை மக்களை இட்டுச்செல்லலாம்; விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராக மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கு எதிரான ஒரு இன அழிப்புப் போராகவும் இது மாறலாம். கடந்த காலங்களில் சிங்கள இராணுவம் செய்த பாரிய இராணுவ நடவடிக்கைகளில், ஏராளமான அப்பாவிப் பொதுமக்கள் பலியானது தெரிந்ததே.

அத்தகையதொரு தீவிர போர்ச்சூழல் எழுந்தால், அது இந்த மேற்குலக நாடுகளின் அரசுகளை ஒரு சிக்கலுக்குள் தள்ளிவிடும். தமிழ் மக்களை அவர்களது தாய்நிலத்தில்வைத்துக் கொன்று - முடமாக்கிவரும் ஒரு அரசாங்கத்திற்கு மேற்குலகம் தொடர்ந்தும் வெளிப்படையான ஆதரவை நல்கிவந்தால், இந்த மேற்குலக நாடுகள் தொடர்பாகத் தமிழ் மக்கள் வைத்திருக்கும் நம்பகத்தன்மைக்கும் நல்லெண்ணத்திற்கும் களங்கம் ஏற்படலாம். இன்றுவரை மேற்குலகம் தொடர்பாக தமிழ் மக்களிடம் ஒரு நல்ல அபிப்பிராயம் இருந்து வருகின்றது. அதாவது, ஒரு முழுமையான தமிழ் இனப் படுகொலையில் சிங்களப் படைகள் இறங்காவண்ணம், மேற்குலக நாடுகள் தமது அரசியல் - இராஜதந்திர - பொருளாதார அழுத்தங்களைப் பயன்படுத்திப் பாதுகாத்துவருகின்றன என்பதே அதுவாகும். மேலும் முக்கியமான விடயம் எதுவெனில், இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காண்பதில் தமது அரசுகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று பிரகடனப்படுத்தி இருந்த நாடுகளே, புலிகள் இயக்கத்தைக் கண்டித்தும் இருக்கின்றன. புலிகள் மீதான கண்டனமும் சந்திரிகா அரசு மீதான ஆதரவும், இராணுவத் தீர்விற்கான உற்சாகப்படுத்தல்களும் ஒன்றுசேர்ந்து, இந்த மேலைநாட்டு அரசுகளின் சமாதான முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கலாம்.

அரசுக்கும் - புலிகளுக்குமிடையேயான நேரடிப் பேச்சுக்களில் ஏற்பட்ட தோல்வி, மற்றும் மூன்றாம் தரப்பாரின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்ள இணங்கும் புலிகளின் நிலைப்பாடும் இறுதியில், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்காக சர்வதேச மத்தியஸ்தத்தைக் கோரும் அளவுக்குச் செல்லலாம்.

ஆனால், இராணுவ நடவடிக்கைகளை உற்சாகப்படுத்தும் மேற்குலகின் போக்குத் தொடருமானால், அது புலிகளின் நிலைப்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதாவது, ஒரு மத்தியஸ்தப் பாத்திரத்தை வகிக்கக்கூடிய நடுநிலையும் - நேர்மையும் இந்த மேற்குலக அரசுகளிடம் இருக்கின்றது என்ற புலிகளின் நம்பிக்கையைச் சிதைத்துவிடக்கூடும்.

இலங்கைத்தீவில் சமாதானம் ஏற்படவேண்டும் என்று இந்த மேற்கு நாட்டு அரசுகள் மனதார விரும்பினால், சிறீலங்கா இராணுவத்திற்கு உதவிசெய்வதை அவை தவிர்க்கவேண்டும். அத்துடன், பேச்சுவார்த்தையை மீளப் புதுப்பிப்பதை வலியுறுத்தியபடி - அவசரப்படாது - பொறுமையுடன் அவை பணியாற்றவேண்டும். O




எமது மக்களின் மனங்களில் இப்போது எழும் முக்கியமான கேள்வியாக இருப்பது, " இந்தியப் படை மீண்டும் வருமா?" என்பதுதான். அந்த ஐயத்தைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு "மக்கள் களம் " என்ற இப் பகுதியில் பதிலளிக்கப்பட்டிருக்கின்றது.

" மக்கள் களம்" பகுதி, எமது மக்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. போராட்டம் தொடர்பாகவும், போராட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும் உங்களுக்குள் எழும் ஐயப்பாடுகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்; " மக்கள் களம் " பகுதி அவற்றைத் தெளிவுபடுத்த முயலும்.

முகவரி கீழே உள்ளது.

**' விடுதலைப் புலிகள் '**
**மையச் செயலகம்,**
**தமிழீழ விடுதலைப் புலிகளின்**
**வெளியீட்டுப் பிரிவு,**
**தமிழீழம்.**

❋ உறையின் இடதுபக்க மேல் மூலையில், " மக்கள் களம் " என்று தயவு செய்து குறிப்பிடுங்கள்.

# அந்நியப் படைகள் வருமா?

சிங்கள வான்படையின் இரண்டு 'அவ்ரோ' விமானங்கள் யாழ்ப்பாண வான்பரப்பில் வைத்து சுட்டுவீழ்த்தப்பட்டது தெரிந்ததே. இந்நிகழ்வின் பின், வடக்கு வான் பரப்பில் சிங்கள வான்படையின் நகர்திறன் பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது; அத்தோடு, வடகடற் பிராந்தியத்தில் சிங்களக் கடற்படை தனது ஆதிக்க நிலையை, கடற்புலிகளிடம் மிக வேகமாக இழந்தும் வருகின்றது. இந்தத் தளநிலையால் வடபுலத்தில் நிலைகொண்டுள்ள சிங்களப் படைகளுக்கு ஏற்பட்ட அபாயத்தைத் தடுப்பதற்காக, வெளிநாடுகளிலிருந்துஇராணுவ உதவியைக்கோர சந்திரிகா அரசு முயற்சி செய்கின்றது என்ற செய்தி, தமிழ் மக்கள் மனதில் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளது. '*இந்தியப் படைகள் மீண்டும் இங்கு வருமா?*' என்பதே அதுவாகும்.

இக் கேள்விக்கான தெளிவான பதிலை எமது மக்கள் பெறுவதற்கு வழிகாட்டி விடுவதே, இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கொழும்பில் இருந்து வெளிவரும் அனைத்து ஆங்கிலப் பத்திரிகைகளும், இந்தியாவின் உதவியைக் கோரும்படி, அரசுக்கு ஆலோசனை கூறிக்கொண்டிருக்கின்றன. அதே வேளை, பெரும்பாலான சிங்கள அரசியல்வாதிகளும் அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். *புலிகளுடனான போரில், சிங்களப்படைகள் தோல்வியை நோக்கி அடியெடுத்துவைக்கத் தொடங்கிவிட்டன என்ற பயம் சிங்கள தேசத்தில் எழுந்துவிட்டதையே,* இவை காட்டுகின்றன.

இருந்தபொழுதிலும், மீண்டும் படைகளை இலங்கைக்கு அனுப்பும் நோக்கம் இந்தியாவுக்குக் கிடையாது என்றே, உலக அரசியல் நோக்கர்கள் வலியுறுத்திக் கூறுகின்றனர். இந்திய - புலிகள் போரில் இந்தியா அடைந்த தோல்வியும், அதனால் பெற்ற அவமானமும், அரசியல் விளைவுகளும் இந்தியாவுக்குப் பலபடிப்பினைகளை வழங்கி உள்ளன. இந்த நிலையில், மீண்டும் படையை அனுப்பிச் சிக்கலுக்குள் மாட்டிக்கொள்ள இந்தியா தயாராக இல்லை என்று, அவர்கள் கூறுகின்றனர். வேண்டுமானால், சிறீலங்கா அரசுக்கு ஆயுதங்களை - இராணுவ ஆலோசனைகளை - கொடுக்கவோ அல்லது கூட்டுக் கடல் ரோந்துகளை மேற்கொள்ளவோ இந்திய அரசு இணங்கலாம் என, அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதேவேளை, அண்மையில் இந்தியா சென்றிருந்த சந்திரிகா அம்மையார், *இந்தியா ருடே* பத்திரிகைக்குச் செவ்வி அளிக்கையில், *"படைகளை அனுப்பும்படி நாங்கள் வேண்டுகோள் விடுத்தாலும், அதைச் செயலாக்க முன்னர் இந்திய அரசு பத்துத்தடவைகள்யோசிக்கும்"* என்று கூறியுள்ளார். இதேவேளை, இந்தியப் படைகள் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்படும் சாத்தியங்கள் இல்லை என்று, திருவாளர் டிக்சிற் உட்பட பல இந்திய இராஜதந்திரிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்குப் பல காரணிகள் உண்டு. முதலாவதாக, புலிகளுடன் ஒரு நேரடிப் போரை மீண்டும் நடத்த இந்திய அரசு விரும்பவில்லை. ஏனெனில், அவ்வாறானதொரு முடிவை எடுத்து புலிகளுடன் ஒரு நீண்ட யுத்தத்தில் ஈடுபட அது விரும்பாது என்பதுடன், முன்னரைவிட பெருந்தொகைத் துருப்புக்களை இழக்க வேண்டிவரும் என்பதும் இந்தியாவிற்குத் தெரியும். இதனால் பல எதிர் விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும்; அத்தகைய விளைவுகளைச் சந்திக்கும் நிலையில் இன்று இந்தியாவின் உள்நாட்டு நிலைமைகள் இல்லை என்பது ஒரு காரணம். இரண்டாவதாக, இலங்கை அரசை நம்பி எப்படி புலிகளுடன் போரைத் தொடுப்பது என்ற கேள்வியும், இந்திய இராஜதந்திரிகளிடம் உண்டு. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே ஆர். ஜெயவர்த்தனாவும் ஆர். பிரேமதாசாவும் இந்திய அரசின் முகத்தில் பூசியகரி இன்னமும் அழிந்துவிடாத நிலையில், மீண்டும் தமது தலையில் மண்ணள்ளிப்போட, இந்தியா தயாராக இருக்கமாட்டாது.

இந்தியாவைப் பொறுத்தளவில் சந்திரிகா அம்மையார் மீது நம்பிக்கை வைத்திருந்தாலும், அடுத்து வரப்போகின்ற சிறீலங்கா ஆட்சியாளர் இந்தியாவுக்கு விசுவாசமாக இருப்பரா என, இந்தியா சந்தேகப்படும் சூழலே இன்றிருக்கின்றது. உண்மையில், சந்திரிகாவிற்கும் இந்திய அரசுக்குமான தற்போதைய நெருக்கம், ஒரு தற்செயல் அல்லது தேவை கருதிய உறவு என்பது, மற்ற எல்லாரையும் விட இந்திய அரசிற்கு நன்கு தெரியும் ஏனெனில் சிறீலங்காவிற்கான ஜனாதிபதித் தேர்தலின்போது, *காமினி திசநாயக்காவையே* இந்தியா - மறைமுகமாக - ஆதரித்திருந்தது. இது, சந்திரிகா அம்மையாருக்கும் தெரியும். எல்லாவற்றிற்கும் மேலாக, சிங்கள மக்களின் பண்பாட்டு மனதில் ஆழக் குடிகொண்டிருக்கும் இந்திய எதிர்ப்பு என்ற வரலாற்று உணர்வையும், இந்தியா சரியாக அறிந்தே வைத்திருக்கும் என நம்பலாம். எனவே, மீண்டும் ஒரு முறை சிங்களத் தலைவர்களால் பயன்படுத்தப்படுவதை இந்தியா அனுமதிக்க விரும்பாது.

இதேவேளை, இந்தியாவின் உள்நாட்டு அரசியல் உறுதிப்பாடு ஒரு ஸ்திரமான நிலையில் இல்லை. *ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப்* பின்னர், ஒரு உறுதியான - கவர்ச்சி மிக்க - தலைமை இந்திய ஆளும் வர்க்கத்திற்குக் கிடைக்கவில்லை. ஆளும் கட்சியான கொங்கிரஸ் கட்சியும் சிதைந்து பலமிழந்து கிடக்கின்றது. இந்த நிலையில், இந்திய ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக (இந்திய மக்களின் நலனுக்காக அல்ல) மீண்டும் புலிகள் இயக்கம் மீது போர் தொடுப்பது என்ற சிக்கலான - ஆபத்து நிறைந்த - முடிவை எடுக்க, இந்தியத் தலைமைப்பீடம் தயாராக இல்லை. அத்துடன், தமிழர்களுடைய விடுதலைப்போராட்டத்தை ஒடுக்க வேண்டும் என்ற வெறி, இந்திய வாக்காளர்களிடம் இல்லை. அண்டை நாடான பாகிஸ்தான் மீது படை எடுத்து, அதன்மூலம் தனது கட்சி நலனைப் பாதுகாத்தபடி - ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்த முயலும் தந்திரோபாயத்தை, இந்திய அரசியல்வாதிகள் தமிழீழம் மீது பயன்படுத்த முடியாது. ஏனெனில், பாகிஸ்தான் இந்தியாவின் பகைமை நாடு; ஆனால், தமிழீழம் அப்படி அல்ல. தமிழீழம் அமைவதை, இந்திய ஆளும் வர்க்கம் விரும்பவில்லை என்பது உண்மையே. இதற்குக் காரணம் இந்தியாவின் நலன்கள் அல்ல; இந்தியாவின் ஆதிக்க சக்திகளான பிராமணியத்தின் நலன்களே ஆகும்.

இத்துடன், உள்நாட்டுக் கிளர்ச்சிகளால் இந்தியா இப்போது திண்டாடிக்கொண்டிருக்கின்றது. காஷ்மீர் மாநிலத்தில் பிரச்சினை வலுவடைந்துள்ளது. மணிப்பூர், சிக்கிம், அஸ்ஸாம், நாகலாந்து மற்றும் ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலுள்ள விடுதலை இயக்கங்கள், தத்தமது ஆயுதச் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தி உள்ளன. இதனால், இந்தியப் படையின் பெரும்பகுதி, உள்நாட்டுக் கிளர்ச்சிகளை அடக்குவதிலேயே பயன்படுத்தப்படுகின்றது. இந்த நிலையில், பாகிஸ்தானுடனான பகைமையும் உச்சக் கட்டத்தில் இருக்கின்றது. இத்தகையதொரு யதார்த்த சூழலில், வெளிநாடொன்றிற்கு இலட்சக்கணக்கான துருப்புக்களை அனுப்ப- அதுவும் போரிடுவதற்கென்று - இந்திய அரசால் முடியாது.

ஆயினும், ஆயுத உதவிகளையும் இராணுவ ஆலோசனைகளையும் சிங்களப் படைக்கு வழங்க, இந்தியா முயலலாம் இதை, இந்தியாவை விட பலம்வாய்ந்த நாடுகளிடம் இருந்தும்சிங்கள அரசு பெறலாம்; ஆனால், அதைப் பயன்படுத்த போர்க்களத்திற்கு வரும்போதுதான், உண்மையை உணர்வார்கள். எனவே, ஆயுதங்கள் - ஆலோசனைகள் பற்றி எமது மக்கள் பயங்கொள்ளத் தேவையில்லை. இதேவேளை, சிங்கள அரசுடன் இணைந்து ஒரு கூட்டுக் கடல் ரோந்தில் இந்தியக் கடற்படை ஈடுபடும் சாத்தியங்கள் உண்டு. ஆனால், இந்தக் கடல்ரோந்து இனிமேல்தான் தொடங்கப் போகின்றது என எண்ணாதீர்கள்; ஏற்கெனவே, இந்தியா இதைச் செய்தபடியே இருக்கின்றது. ஆனாலும், பல்லாயிரம் மைல் நீளம்கொண்ட இந்தக் கடலை, இந்திய - சிங்களக் கடற்படைகள் தங்களது வலைக்குள் வைத்திருக்கவும் முடியாது. அதேவேளை, கடற்புலிகளின் பலமும் - செயற்திறனும் நன்றாகவே வளர்ந்துவிட்டன.

ஆயினும், இந்திய புலனாய்வுத் துறையான 'றோ' அமைப்பு. சிங்களப் புலனாய்வுத் துறையுடன் இணைந்து, போராட்டத்தை நசுக்கும் எண்ணத்துடன் நாசவேலைகள் புரிய சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனாலும் எமது மக்கள் விழிப்புடனும் - எச்சரிக்கை உணர்வுடனும் இருந்தால், இந்த சதி - நாசவேலைகளை வெற்றிகரமாகத் தடுக்க முடியும்.

இது ஒருபுறமிருக்க, இப்போது வேறு ஒரு கேள்வியும் மக்களின் மனதில் எழுந்தபடி உளளது; அதாவது, 'சார்க்' படைகள் வருமா என்பதே அதுவாகும்.

அதாவது, தென்னாசியப் பிராந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை, பூட்டான், மாலைதீவு ஆகிய நாடுகளின் கூட்டுப்படை தமிழீழம் வந்து, போராட்டத்தை அடக்க முயலலாம் என்பதே அந்தச் சந்தேகமாகும்.

ஆயினும், 'சார்க் படை' என்று இப்போது ஒரு படையுமே இல்லை. அப்படி ஒரு படையை அமைக்கக்கூடிய சூழலில் 'சார்க்' நாடுகளும் இல்லை. உண்மையில் அவை, ஒன்றையொன்று பிடித்துத்தின்னும் நிலையில் உள்ளன; ஒன்றின் மீது மற்றது சந்தேகப்படும் அளவில் இருக்கின்றன.

இருந்தபொழுதிலும், "பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க" 'சார்க்' நாடுகள் ஒன்றுசேர்ந்து ஒரு கூட்டுப் படையை அமைக்க வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது என்பது உண்மையே. ஆனால், "பயங்கரவாதம்" என்று எதைக் கருதுவது? அதை யார் தீர்மானிப்பது என்ற கேள்விகள் எழும்போது, 'சார்க் படை' என்பது காற்றோடு போய்விடும்.

தென்னாசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் பயங்கரவாதத்தைத் தூண்டிவருகின்றது என்று, இந்தியா குற்றஞ்சாட்டிவருகின்றது. அப்படியாயின், 'சார்க்' படை அமைக்கப்பட்ட உடனே, அதைப் பாகிஸ்தானுக்குத்தான் அனுப்பவேண்டும் என்று இந்தியா கூறும்; எனவே, 'சார்க்' படை என்பது இந்தியாவின் ஒரு சதி என்றே பாகிஸ்தான் எண்ணும். அதில் உண்மை இல்லாமலும் இல்லை. எனவே, 'சார்க்' படையை அமைக்க தென்னாசியாவின் இரண்டாவது பலம் பொருந்திய நாடு அனுமதிக்காது.

இந்தியாவுக்கும் 'சார்க்' படை தொடர்பான ஒரு அச்சம் உண்டு. 'சார்க்' படை உருவாக்கப்பட்டால், காஷ்மீர் "பயங்கரவாதத்தை" ஒழிக்க அது அங்கே போகவேண்டி இருக்கும். அப்படி ஒரு 'சார்க்' படை வந்தால் அதில், இஸ்லாமிய நாடுகளான

( 9 ஆம் பக்கம் பார்க்க)

# பலம்தான் வாழ்வு

## கடற்புலிகளுக்கும் விமான எதிர்ப்பு படைப்பிரிவிற்கும் ஆட்கள் தேவை




மூன்றாம் ஈழப்போர் தொடங்கி விட்டது! ஆரம்பமே சிங்களப் படைக்கு கூடாத காலமாக உள்ளது.

சிங்களப் படைத்துறைத் தலைமை தயாரித்து நடைமுறைப்படுத்தும் வட தமிழீழம் மீதான போர்முறைத் திட்டத்தில் பெரும் பங்கு வகிப்பது, அதனது கடற்படையும் வான்படையும் ஆகும். இரண்டு படைகளுமே இப்போது இக் கட்டுக்குள் மாட்டிக்கொண்டுவிட்டன.

'சூரயா','ரணசுறு' பீரங்கிக் கப்பல்கள் கடற் கரும்புலிகளால் மூழ்கடிக்கப் பட்ட பின்னர் முல்லைத்தீவு,வெற்றிலைக்கேணி, ஆனையிறவு படைத்தளங்கள் அநாதைகள் ஆகிவிட்டன. இனிமேல், கிழக்குக் கடற்பிராந்தியத்தின் ஊடாக மேற்குறித்த படை முகாம்களுக்கு விநியோகங்கள் சென்றடைவது என்பது, 'குழப்படிகார மாட்டைக் கட்டி பால் கறப்பதுபோல' சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு இருக்கப்போகின்றது. இதேபோன்றதொரு அபாய நிலைமை தான் பலாலி, காரைநகர். மண்டைதீவு, பூநகரி படைத்தளங்களுக்கும் ஏற்பட்டுள்ளது.


இது மிகைப்படுத்தப்பட்ட ஒரு கருத்து அல்ல கொழும்பில் இருக்கும் அரசியல் – இராணுவ அவதானிகளின் கருத்தும் இதுதான்; உலகச் செய்தி நிறுவனங்களின் அபிப்பிராயமும் இது தான்.

இது ஒருபுறம் இருக்கட்டும்.

- மரபுவழிச் சமருக்கு போர் விமானங்கள் அவசியம்.
- வடபுலப் படைமுகாம்களுக்கு அத்தியாவசிய தேவைகளை எடுத்துச் செல்ல படை விமானங்கள் அவசியம்.
- இடம் பிடிப்பதற்காக படையினர் ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையைச் செய்ய விரும்பினால், அதற்குக் கட்டாயம் போர் விமானங்கள் அவசியம்.
- படையினரின் முகாம்கள் மீது புலிகள் தொடுக்கும் பாரிய தாக்குதல்களிலிருந்து முகாமைப் பாதுகாக்க முயலவேண்டுமாயின், அதற்குப் போர் விமானங்கள் - உலங்கு வானூர்திகள் அவசியம்.

இதற்கு வேண்டிய விமானங்களும் உலங்குவானூர்திகளும் அரசிடம உண்டு.

ஆனால் கடந்த 28, 29ஆம் திகதிகளில், புலிகளின் 'விமான எதிர்ப்புப் படையினர்' தமது விமான எதிர்ப்பு ஆயுதங்களுடன் 'வான் சென்றி' போடத் தொடங்கியபின்னர் வந்த இரண்டு 'அவ்ரோ'க்கள் திரும்பிப் போகவில்லை. அதன் பின்னர் வடபுல வான்பரப்பு, 'வாந்திபேதி பரவிய கிராமம் போல' வெறிச்சோடிக் கிடக்கின்றது; வந்த 'சுப்பசொனிக்'கும் கடற்பிரயாணம் செய்து சென்றுவிட்டது.




இப்போது, வடபுலம் மீதான போரை எப்படி நடாத்துவது என்று சிங்கள அரசு குழம்பியபடி உள்ளது. அதே வேளை, வடபுலத்தில் ஏற்கெனவே நிலைகொண்டுள்ள தனது 30,000 துருப்புக்களை எவ்விதம் பாதுகாப்பது என்றும் கலங்கிப்போயுள்ளது. படைத்துறைத் தலைமையகத்தில் நடுநிசி தாண்டியும் விளக்குகள் எரிகின்றனவாம்! ஆனாலும், நிலைமையை அது எப்படிச் சமாளிக்கப் போகின்றது என்ற விபரம் இதுவரை வெளியாகவில்லை.

முடிவு எதுவாக இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்த சிங்கள அரசுக்குக் காலம் எடுக்கும். அந்தக் கால அவகாசத்தை சிங்கள அரசுக்கு நாம் கொடுக்கவே கூடாது. 'பல்லுப் பிடுங்கப்பட்ட புடையன் பாம்பு புல் பூண்டிற்குள் பதுங்குவதுபோல', வடபுலத்தில் உள்ள 30,000 படையினர் பதுங்குகின்றனர்; பல்லு முளைக்க முன்னர் அதை அடித்துக் கொல்லவேண்டும்.

இப்போது சிங்களக் கடற்படையின் நகர்திறனும் ஏறக்குறைய நிறுத்தப்பட்டுவிட்டது: வான்படையின் நகர்திறனும் பெரும்பாலும் நிறுத்தப்பட்டுள்ளது.

வேட்டை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது.

விலங்கு வேட்டையில் வெற்றி என்பது விலங்குகளைக் கொல்வது மட்டுமல்ல; கொன்ற விலங்கை அடர் காட்டிற்குள் இருந்து சுமந்துவந்து வீடுசேர்ப்பதும்தான். வேட்டையாட சிலபேர் போதும்; ஆனால், வேட்டையின் பயனை முழுமையாக அடைய பலரது துணை தேவை. கடற்படையும் வான்படையும் வேட்டையாடப்பட்டதால், வடபுல முகாம்களின் பற்கள் பிடுங்கப்பட்டுப் பலமிழந்துபோய்க் கிடக்கின்றன. இனி அந்த வேட்டையின் பயனை நாம் பெறவேண்டும்; அந்த முகாம்களுக்குள் புகுந்து, படையினரை அழித்து, எமது ஊர்களை மீட்க வேண்டும். அதற்கு புலிகள் இயக்கத்திற்கு ஆட்கள் தேவை. எதிரி மீண்டும் எழுமுன்னர், நாம் முந்திக்கொண்டு அவனைக் கொன்று விடுதலையைப் பெற வேண்டும்.

இதற்கு எமது இளைஞர் படை திரளவேண்டும் என்று, புலிகள் இயக்கம் அவசர அழைப்பு விடுக்கின்றது.

தமிழீழ தேசத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களான இளைஞர் – யுவதிகளே!

எமது விடுதலைப் போராட்டம் பெற்றிருக்கும் இந்த உடனடி வெற்றியை ஒரு நிரந்தர வெற்றியாக நிலைநிறுத்துவதற்காக, எமது தாயகத் திருநாடு உங்களது சேவையை வேண்டுகிறது. நாங்கள்

வேகமாகச் செயலாற்றவேண்டிய நேரம் இது.

ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை தான் இத்தகைய ஒரு அரிய வாய்ப்பு ஒரு இனத்திற்குக் கிடைக்கும். அது இப்போது தமிழீழ மக்களுக்குக் கிடைத்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தை தமிழினத்திற்கு உரித்தான நிலையான வெற்றியாக மாற்ற, உடனடியாகவே வந்து இயக்கத்தில் சேரும்படி, உரிமையுடன் அழைக்கின்றோம்.

நீங்கள் புலிகள் இயக்கத்தில் இணையத் தவறினால் அல்லது தாமதமானால், எதிரி நிமிர்ந்துவிடுவான். அவசரம் அவசரமாக சிங்கள தேசத்தில் 10, 000 ஆட்களை படைக்குச் சேர்க்க முயற்சிகள் நடக்கின்றன. ஒரு பெரிய இராணுவத் தோல்வியைத் தவிர்க்க, எதிரி ஒரு பெரிய படையைத் திரட்ட முயல்கின்றான்; அவனை நாங்கள் முந்திக்கொள்ள வேண்டும். எதிரியை முந்திக்கொண்டு 5000 இளைஞர்கள் விரைவாகப் புலிகள் இயக்கத்தில் இணைந்தால், வடபுலத்திலுள்ள சிங்களப் படை முகாம்களை பூண்டோடு அழித்து விடலாம்.

கடற்படையும் வான்படையும் இல்லாத இந்த நிலையில், சிங்களப் படை







யுடனான சண்டையை ஒருமுறை நினைத்துப் பாருங்கள். அதேவேளை எமது கடற்புலிகளின் துணையுடனும், எமது 'மோட்டர்' பிரிவு மற்றும் கனரக ஆயுதப் பிரிவின் துணையுடனும், சிங்களப் படைமுகாம்களுக்குள் நீங்கள் புகுவது போலவும் ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள். சண்டை என்பது எவ்வளவு ஒரு எளிதான விடயமாகத் தெரியும்!

இந்த நேரத்தில் நீங்கள் இயக்கத்தில் இணைந்தால், எமது விடுதலைப் போராட்டம், நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு அபார வெற்றியைப் பெறும்; அந்த வெற்றிக்காக நீங்களும் மக்களால் கௌரவிக்கப்படுவீர்கள்.

'இயக்கத்தில் இணையுங்கள் – அதுவும் அவசரமாக இணையுங்கள்' என்று புலிகள் இயக்கம் உங்களுக்கு அழைப்புவிடும் இந்த நேரத்தில், வடபுலத்திலுள்ள சிங்களப் படைகள் சந்திக்கப் போகும் பேரழிவை எப்படித் தவிர்க்கலாம் என்றே, சிங்களத் தளபதிகளுடன் சந்திரிகா மந்திராலோசனை நடாத்திக் கொண்டிருக்கிறார். தனது கடற்படையையும், வான்படையையும் அதி நவீனப் படுத்தும்வரை, அது அவரால் முடியாததாகவே இருக்கும்; அதி நவீனப்படுத்துவதற்கும் பல மாதங்கள் செல்லும். அதற்கிடையில் வடபுலத்திலிருந்து எதிரியை விரட்ட ஒரேயொரு வழி, ஆயிரக்கணக்கில் எமது இளைஞர்களும் - யுவதிகளும் இயக்கத்தில் இணைவதுதான்.

அவரைப் பார்த்து இவரைப் பார்த்து காலத்தை இழுத்தடித்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு, உடனடியாகவே நீங்கள் இயக்கத்தில் சேருங்கள்!

இந்த அவசர அழைப்பை நீங்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றே, உங்களது மனச்சாட்சி உங்களைத் தூண்டும்.

மனச்சாட்சிப்படி நடவுங்கள்!

தேசத்தை மீட்க உடனடியாகவே விரையுங்கள்!

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் ○

# இவர்களுக்காகவேனும்...

அந்தக் கும்மிருட்டில் புதர்களை விலக்கியபடி நடந்து கொண்டிருக்கின்றோம். பல மணி நேர தொடர் நடை. நாட்டுக் கட்டைகளாலும் 'இலுக்'குக் கூர்களாலும் பதம்பார்க்கப்பட்ட பாதங்கள், சூரைப் பற்றைகளின் தழுவல்களால் எரிந்து கொண்டிருக்கும் உடம்பு, தாகம்... பசி......

ஓய்வின் அவசியம் உணரப்பட்டு, பயணத்தை நிறுத்திக் காலை தொடர்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தூரத்தில் எரிந்துகொண்டிருந்த குப்பி விளக்கொன்று அங்கு 'வாடி' ஒன்றிருப்பதை உணர்த்தியது. நிச்சயம் அங்கு தண்ணீர் இருக்கும். காட்டை அண்டியிருந்த அந்தக் குடிசையை நோக்கி நடக்கின்றோம். சுற்றிவர சேனைப் பயிர்கள். குடிசையிலிருந்து சற்றுத் தள்ளி, ஒரு மரக் கொட்டுப் பதித்த கிணறு. அடர்ந்து வளர்ந்திருந்த வேப்ப மரங்கள்.

* * *

நேரம் நடு இரவை எட்டிக்கொண்டிருக்க, காவற் கடமைப் போராளிகள்



இருவரைத் தவிர மற்றையப் போராளிகள் அனைவரும் உறங்கிவிட்டனர். கீர்த்தியும் (கப்டன்) நானும் சுற்றிவர ஒருமுறை நடந்துவிட்டு வந்து, அந்த வேம்பின் கீழ் 'உரப்பையை' விரித்து அதில் சாய்கின்றோம்.

குடிசைத் 'தட்டி' திறக்கப்படுகிறது.

குப்பி விளக்கொன்றைக் கையில் பிடித்தபடி, பத்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமி, அவளுடன் ஒரு சிறுவன்; அவளின் தம்பியாக இருக்கவேண்டும்.

''என்ன தங்கச்சி?''

சிறுமி விளக்கைச் சிறிது உயர்த்தி பார்க்கிறாள். பின் சற்றுத் தள்ளிப் படுத்திருந்த மற்றைய போராளிகளையும் ஒருமுறை பார்த்து விட்டு, விரைவாய் குடிசையுள் சென்றுவிடுகிறாள்.

''மாமா – மாமா''

இருவரும் விழித்துக்கொள்கின்றோம். நேரம் அதிகாலை, கையில் ஒரு ஓலைப் பெட்டியுடன் அச் சிறுமி; அவளருகில் சிறுவன். அவன் அருகில் கேத்தலொன்று.

''என்ன தங்கச்சி ... ?''

''ரொட்டி இருக்கு, சாப்பிடுங்க மாமா —தேத்தண்ணிக்கு சீனி காணா, தொட்டுத்தான் குடிக்கோணும்.''

கூறியபடி அவள் சிரிக்கிறாள்.

''அப்பா அம்மா எங்க?''

''அப்பா வயலுக்கு பண்டிக்காவலுக்குப் போயிற்றார். அம்மாவுக்கு சுகமில்லை''

(8 ஆம் பக்கம் பார்க்க)

# போர்செய்யத் துணிந்த மக்கள்தான்

# சுதந்திரமாக வாழ்வார்கள்!

உனது வீட்டிலேயே உனது அம்மா கொல்லப்படுவதை உன்னால் சகிக்க முடியுமா? அல்லது எதிரி முன் கைகூப்பி – கெஞ்சி உயிரைப் பாதுகாத்துக்கொள்ள உன் அம்மா முயல்வதை உன்னால் தாங்க முடியுமா? உனது கண்முன்னாலேயே அக்கா – தங்கைகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, கோரமாகக் கொல்லப் படுவதை உன்னால் சகிக்க முடியுமா? எறிகணை அல்லது விமானக் குண்டுகள் உனது வீட்டின்மேல் விழுந்து சகோதரர்களை இரையாக்குவதை உன்னால் தாங்க முடியுமா?

உன்னால் மட்டுமல்ல, எவராலுமே முடியாது!

அப்படிக் கொல்லப்படுவது – வதைபடுவது என்பது ஒருபுறம் இருக்கட்டும். அந்தக் கோரத்தை எங்களுடைய கண்களால் பார்ப்பது என்பது 'கொடிதிலும் கொடிது' இல்லையா...? அதைப் பார்த்தபின் உயிர் வாழவும் வேண்டுமா? இத்தகைய ஒரு அவலம் எவருக்குமே நேரக்கூடாது.

கும்பல் கும்பலாக வெட்டிக் கொல்லப் படுதலை, பாலியல் வன்முறைகளுக்குப் பலியாதலை யாழ்.குடாநாடு இடையிடையே கண்டிருக்கின்றது; ஆனால், மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை – திருக்கோணமலை மாவட்டத்திலும், அதுதான் அன்றாட வாழ்க்கை.

இத்தகைய ஒரு அவலமான அன்றாட வாழ்வை யாழ். குடாநாட்டிற்குள் கொண்டு வர எதிரி முயன்றபடி உள்ளான்.

யாழ். குடாநாட்டை பூரணமாகக் கைப்பற்ற இராணுவம் அனுமதி கோரியபடி உள்ளது; அதற்கான தயாரிப்புகளை செய்துகொண்டிருக்கிறது. அத்தகையதொரு நாசகாரத் திட்டத்தை அமுல்படுத்தவே, 10, 000 சிங்கள இளைஞர்களை




அரசு படைக்குச் சேர்த்துக்கொண்டிருக்கின்றது. புத்தபிக்குகளும், பாடசாலை மாணவர்களும், விவசாயம் செய்த இளைஞர்களும் இராணுவத்தில் சேர்ந்தபடி உள்ளனர். குறிப்பாக, சிங்களக் குடியேற்றங்களில் இருந்து சிங்களக் காடையர்கள் இராணுவத்தில் இணைந்தபடி உள்ளனர். இந்தக் காடையர் படை குடாநாட்டிற்குள் புகுந்தால், மேற்குறித்த காடைத்தனங்கள் அனைத்தும் எமது கண்முன்னாலேயே நடக்கும்; நாமும் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படுவோம்.

யாழ். குடாநாடு சிங்களப் படைகளின் கைகளில் விழுந்தால், மட்டக்களப்பு, திருக்கோணமலையில் அவர்கள் செய்த அட்டூழியங்களை விட அதிக கொடுமைகளை யாழ்ப்பாணத்தில் செய்வார்கள்; இதற்குப் பல காரணிகள் உண்டு. அவை என்ன என்பது யாழ்ப்பாண மக்களுக்கு நன்கு தெரியும்.

ஆகவே, யாழ். குடாநாடு சிங்களப் படைகளிடம் வீழ்வதை நாம் அனுமதிக்கவே கூடாது.

இதைக் குடாநாட்டு மக்கள் முழுமையாக ஆதரிப்பார்கள்.

அப்படியாயின், எப்படி அந்த இராணுவப் படையெடுப்பைத் தடுக்கலாம்? அல்லது படை எடுக்க முன்னரே, எவ்வாறு இராணுவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டி அடிப்பது?

மந்திர – தந்திரங்கள், பூசை – நேர்த்திகள்மூலம் அதைச் செய்ய முடியுமாயின், புலிவீரர்களும் சேர்ந்து அதைச் செய்யத் தயாராய் இருக்கின்றார்கள்.

ஆனால், அப்படிச் செய்து சிங்களப் படையெடுப்பைத் தடுக்க முடியாது என்பதும் எல்லாருக்கும் தெரியும்.




அப்படியாயின், சிங்கள இராணுவத்தை முறியடித்து எமது மண்ணிலிருந்து விரட்டுவது எவ்வாறு?

வழி இருக்கின்றது; ஒரேயொரு வழிதான் இருக்கின்றது. அது. துப்பாக்கி எடுத்துப் பிடித்து இராணுவத்தைக் கலைப்பதுதான்;

இந்தக் கருத்தையும் எமது மக்கள் எல்லாரும் ஏற்றுக்கொள்வார்கள்; ஆனால், அதைச் செயலில் காட்ட முன்வருமாறு அழைப்புக்கள் விடுக்கும்போது பலர் மறுத்துவிடுகின்றனர்.

இது ஏன்?

குடும்பப் பொறுப்பு, உடல்நிலை இடம் தராது என்று பல காரணங்கள் கூறித் தப்ப முயன்றாலும், உண்மையில் பயம் என்பதுதான் பிரதான காரணம். எமது இளஞ்சமூகம் பயம் என்பதை ஒரு கோழைத்தனமான விடயமாகவே கருதுகின்றது என்பது உண்மையே! ஆயினும், போர்க்களம் சம்பந்தமான மிகைப்படுத்தப்பட்ட அச்சமும், போர்க்கருவிகள் தொடர்பான அறிவின்மையும்தான் பய உணர்வுக்குக் காரணம். இந்தப் பயம் நியாயமானதா என்று ஆராய்ந்து பார்த்தால், "இல்லை" என்றுதான் விடை வரும்.

பொதுவாக, எமது மக்கள் தமது ஊர்ப் போராளி ஒருவரைப் பார்த்து இப்படி வியப்பதைநீங்கள் கண்டிருப்பீர்கள் -

"இருண்டால் வீட்டைவிட்டு வெளிக்கிடாதவன் சண்டையில் பெரிய சாதனை எல்லாம் செய்கிறானாம்!"

"தோட்டத்துக்குள்ள ஒரு நோஞ்சானைப்போல நிண்டவன் பெரிய பெரிய ஆயுதங்களால ஆமியைச் சுட்டுத்தள்ளுறானாம்!"

மக்களின் இந்தக் கதைகளில்உண்மை இல்லாமல் இல்லை. சாதாரண இளைஞர்களாக தத்தம் வீடுகளில் வாழ்ந்த இளைஞர்கள் இயக்கத்திற்கு வந்து இராணுவப் பயிற்சி எடுத்தபின், தாங்களே வியப்படையும் அளவுக்கு சண்டைகளில் துணிவு பெறுகின்றனர். இதற்குக் காரணம் எதுவெனில், போர்க்களம் மற்றும் போர் ஆயுதங்கள் பற்றிய உண்மைகளை பயிற்சி முகாமில்வைத்து அறிந்துகொண்டதுடன்,




அவற்றை எதிரிக்கு எதிராகப் பயன்படுத்திவிட்டு, தான் அதிலிருந்து தப்பிக்கப் பழகிவிடுவதும்தான்.

பாடசாலைகளிலோ, வீடுகளிலோ இருந்தபடி ஒரு சண்டையைக் கற்பனை செய்து பார்க்கும்போது, போர்க்களம் என்பது கொலைக்களத்தைப்போலத் தென்படும். இல்லாததையெல்லாம் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு பார்த்தால், சண்டை என்பது பயங்கரமானதாகவே தோன்றும். எறிகணை விழும், விமானம் குண்டு போடும், டாங்கிகள் வரும், ஆமி வருவான்... அதற்குள் நின்று என்ன செய்வது என்று அநாவசியமாகக் கற்பனை செய்து பார்த்தால், சண்டை என்பது கடினமாகவே தோன்றும். 'சண்டையின் போது ஆமிக்காரன் துணிச்சலுடன் துப்பாக்கியைப் பிடித்தபடி வருவான்' என்றே, எமது இளைஞர்களும் யுவதிகளும், பொதுவாக நம்புகின்றனர்.

உண்மை அப்படி அல்ல என்பதை களத்தில் நிற்கும் ஒரு புலிவீரனால்தான் கண்டுகொள்ள முடியும். எதிரியை விரட்டி அடிப்பதும், பாய்ந்து பாய்ந்து அவனது ஆயுதங்களைப் பொறுக்குவதும், தொடை நடுங்கியபடி எதிரி ஓடுவதைக் காண்பதும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயம் என்பதை, நீங்களும் இயக்கத்தில் இணைந்த பின்னர்தான் உணர்வீர்கள்.

இதேபோலத்தான், எதிரியின் ஆயுதங்களையும் அவை போடும் சத்தத்தையும் கேட்டுவிட்டு, போர்க்களத்தைக் கற்பனை செய்து பார்த்துப் பயப்படும் தன்மையையும், காணக்கூடியதாக உள்ளது. டாங்கிகள், எறிகணைகள் என்பவற்றால் பாதிக்கப்படுகின்ற மக்களைவிட, அவற்றின் சத்தத்தைக் கேட்டு நோய்வாய்ப்படும் ஆட்களின் தொகையே அதிகம். அத்துடன், குண்டுகள் பற்றிய அதீத கற்பனையும் பயத்திற்குக் காரணம். தனது வீட்டில்தான் எறிகணை விழப்போகின்றது என்று பயந்தபடி ஒவ்வொரு வீடும் நடுங்கிக்கொண்டிருந்தால், அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்?

சண்டை ஒரு பரந்த நிலப் பரப்பில் நடக்கும். ஒரு எறிகணை விழுந்து வெடித்தால் மிக அருகில் நின்றவர்தான் காயமடைவார்; தற்காப்பு நிலையில் இருந்தால் அதையும் தவிர்த்துவிடலாம். ஒரு டாங்கி - அது என்னதான் சத்தம் போட்டாலும் - எறிகணைகளைத்தான் வீசும்; அத்துடன், டாங்கியை மடக்குவது என்பது மிகவும் சுலபம். திரைப்படங்களில் டாங்கிகளை மடக்கும் காட்சிகளைக் காட்டும்போது, அதை இளைஞர்கள் நம்புவது குறைவு; ஆனால் அப்படி மடக்க முடியும் என்பதை இயக்கத்திற்கு வந்த பின்னர்தான் ஒருவர் தெரிந்துகொள்வார். சில வேளை, அப்படி ஒரு டாங்கியை மடக்கி தலைவரிடம் பரிசு பெறும் சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கலாம்.

எனவே, போராயுதங்களையும் அவை எழுப்பும் சத்தங்களையும் கண்டு பயந்து, இயக்கத்தில் இணைவதற்குப் பின்நிற்கக் கூடாது!

இப்படி வியட்நாம் இளைஞர்கள் பயந்திருந்தால், அவர்கள் விடுதலை பெற்றிருக்க முடியாது; எரித்திரிய மக்கள் நடுங்கியிருந்தால், அவர்கள் சுதந்திரம் பெற்றிருக்க முடியாது! அத்துடன், இப்படியான பெரிய உருவங்களையும் பெரும் சத்தத்தையும் காட்டித்தான், 400 வருடங்களுக்கு முன்னர், யாழ்ப்பாண அரசை அந்நியர்கள் அடிமைப்படுத்தினர் என்பதையும் மறக்கக் கூடாது.

போர்செய்யத் துணிந்த நாடு எதுவோ அதுதான் சுதந்திரமாக இருக்கும்; போர் செய்யத் துணிந்த மக்கள் எங்கிருக்கின்றார்களோ அவர்கள்தான், பாதுகாப்பாக – மானத்துடன் இருப்பார்கள்.

தோல்வி அடைகின்றோம் என்று தெரிந்துகொண்டு 10, 000 சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் இணைய முன் வரும்போது, வெற்றியைப் பெறுவதற்காக இயக்கத்தில் இணைய, எமது இளைஞர்கள் ஏன் பின்நிற்கவேண்டும்?

அதுவும், சிங்களப் படையின் விமானங்களும் – கடற்கப்பல்களும் இல்லாத இந்த நேரத்தில் நீங்கள் இயக்கத்தில் இணைவதன்மூலம், வடபுல முகாம்களைத் துடைத்தெறிந்துவிடலாம்!

வாருங்கள் –

உங்களுக்கு அருகிலுள்ள வட்ட, கோட்ட, மாவட்டச் செயலகத்திற்குச் சென்று, இயக்கத்தில் சேர்ந்துகொள்ளுங்கள்!




**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

**– தமிழீழ விடுதலைப் புலிகள்**

---

## இவர்களுக்காகவேனும்...

*(8ஆம் பக்கத் தொடர்ச்சி)*

''அப்ப ஆர் ரொட்டி சுட்ட?''

''நான் தான். தம்பி தேத்தண்ணி வைச்சவன்.''

'நாங்க ஈ. பி. காரன்டா.'– கீர்த்தி பகடியாகச் சொல்லி முடிக்கவில்லை –

''இந்த மாமவை எனக்குத் தெரியும்.,'
''எப்படித் தெரியும்?''

''நீங்களும் அத்தி மாமாவும்......''

அவள் இரண்டு வருடங்களுக்கு முந்திய சம்பவமொன்றை விபரிக்கின்றாள்.

''எல்லோரையும் எழும்பி சாப்பிடச் சொல்லுங்க, நல்ல பசியா இருக்கும்.....''

கூறியபடி பரிமாற ஆரம்பிக்கின்றாள்.

மூன்று மாதங்களின் பின் மீண்டும் அதே வழியால் திரும்பிக் கொண்டிருக்கின்றோம் .... அதோ அந்தக் குடிசை.

* * *

''வாங்க மாமா.''

மலர்ச்சியுடன் அந்தச் சிறுமி. வெளியில் கிடந்த மரக் குற்றியில் குந்திக்கொள்கின்றோம்.

''இருங்க வாறன்'' – அவள் குடிசைக்குள் நுழைகின்றாள்.

''ஒண்டும் வேணாம் தங்கச்சி, நேரம் போகுது; சும்மா பாத்திட்டு போவமென்று ....'' நான் முடிக்கவில்லை,

''தேத் தண்ணி குடிச்சி சோளன் சாப்பிட்டுத்தான் போகவேணும்'' – குடிசைக்குள் இருந்து அவள் குரல் கட்டளை போல் ஒலிக்கிறது.

சிறிது நேரத்தில்...... தேநீரைக் குடித்துவிட்டு சோளனைச் சுவைத்தபடி கேட்கிறோம் –

''அம்மா தம்பி எல்லாம் எங்க?''

''அம்மாவும் தம்பியும் கடைக்குப் போயிருக்காங்க.''

''அப்பா?''

''ஆமி சுட்டுப் போட்டான்-''

இடியாக எம்மில் இறங்கின அந்த வார்த்தைகள் ... ஸ்தம்பித்து நிற்கிறோம்,

மௌனம்.

சிறிது நேரத்தின் பின், அருகில் அழைத்து விபரம் கேட்கின்றோம்.

எத்தனை கொடுமை...... இந்தப் பிஞ்சுகளின் கண் முன்னாலே ... அவள் கண்களில் நீர் நிறைகிறது. வார்த்தைகள் வர மறுக்கின்றன.

பெரியவர்களாக இருந்தால் ஏதாவது சொல்லித் தேற்றலாம். இந்தப் பிஞ்சை என்ன கூறித் தேற்றுவதென்று எமக்கு தெரியவில்லை.

மீண்டும் நீண்டதொரு மௌனம்......

''என்ன மாமா ஒண்டும் கதைக்காம இருக்கிறியள்?''

எம்மால் எதுவும் பேசமுடியவில்லை. அவளையே பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

மீண்டும் அவள்தான் மௌனத்தைக் கலைக்கின்றாள். தனக்குத் தெரிந்த போராளிகளை நலம் விசாரிக்கின்றாள்.

எமது உதடுகள் பதிலளிக்கின்றன.

உள்ளமோ ...

'' போயிற்று வாறன் தங்கச்சி.''

''வரக்குள்ள இஞ்ச வந்துதான் போகணும்.''

அதே கட்டளைத் தொனி.

நடக்கின்றோம்.....

''மாமா கவனமாக போயிற்று வாங்க.''

அந்தப் பிஞ்சுக் குரல் மிதந்து வருகிறது-

ஒரு கணம் அக்குடிசையைத் திரும்பிப் பார்க்கிறோம் –

' எம் செல்வங்களே, உங்களுக்காகவாவது இறுதிவரை உறுதியுடன்......'

துப்பாக்கியை இறுகப் பற்றியபடி விரைவாய் நடக்கின்றோம்!

(உண்மைச் சம்பவம்)

– நரேஸ்

# தமிழீழ விடுதலைப் போராட்டம்

# ஒரு முடிவில்லாத யுத்தமா?

'எவருமே வெற்றிபெற முடியாத யுத்தம் இது.'

'ஒரு முடிவில்லா யுத்தம் இது.'

'போரில் தோற்றவர்களே உண்டு; வென்றவர்கள் இல்லை.'

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இந்த அபிப்பிராயங்கள் அவர்களுக்கு மிகவும் பழக்க மானவையாகும். எமது விடுதலைப் போரை மதிப்பீடு செய்ய முனைந்த மேலைத்தேய பத்திரிகையாளர்கள் மேற்குறித்த கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். அத்துடன், சில சமயங்களில் சிங்கள அரசியல்வாதிகள் சிலரும், சிங்கள புத்திஜீவிகள் மற்றும் தொடர்பு சாதனங்களும் இந்த மதிப்பீடுகளை எடுத்தாள விரும்புவதுதான்...... கோழி நனைகின்றது என்று ஓநாய் அழுத கதைபோல உள்ளது.

இந்தத் 'தத்துவங்களை', சிங்களப் பேரினவாத சக்திகள் பிரச்சாரப்படுத்துவதன் உள்நோக்கங்களை, தமிழ் மக்கள் அறிந்துவைத்திருப்பது அவசியம். ஏனெனில், இந்த 'தத்துவங்களின்' பின்னாலுள்ள ஆக்கிரமிப்புவாத நோக்கத்தை அறியாமல், எமது மக்களும் இவற்றை நம்பமுயல்வது அபாயமானதாகும்.

போர், உயிரழிவுகளையும் சொத்தழிவுகளையும் கொண்டுவருகின்றது என்பது உண்மையே. அதனால், மனிதகுலம் காலாதிகாலமாக அளப்பரிய சோகங்களைச் சுமந்து வருகின்றது என்பதும் உண்மையே. ஆனால், ஒரு நாட்டை எதிரியானவன் தனது படைபலம் கொண்டு ஆக்கிரமிக்க முயலும் போது, அல்லது ஒரு இன அழிப்பில் எதிரிப்படைகள் ஈடுபட முனையும்போது, இவற்றிலிருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்வதற்காகத் தற்காப்புப் போர் ஒன்றை நடாத்துவது, தவிர்க்க முடியாதது; அத்துடன் அத்தியாவசியமானதும் கூட.

இத்தகையதொரு தற்காப்புப் போர், படிப்படியாகப் பலமடைந்து, வெற்றியை நோக்கி வீறுநடை போட முயலும்போது, குறித்த அந்த மக்களது உளவுறுவை - போர் உறுதியை - சிதைக்கும் சூழ்ச்சிகர எண்ணத்துடன், போர் தொடர்பான அவநம்பிக்கைத் தத்துவங்களைப் பரப்புவதை, எதிரி அரசுகள் ஒரு தந்திரோபாயமாகக் கைக்கொள்கின்றன.

'முடிவில்லா யுத்தம்' என்ற சொற்பதம், வியட்னாம் விடுதலைப் போரின்போது அமெரிக்கத் தலைமையிலான மேற்குலகத் தொடர்பு சாதனங்களால் பெரிதும் கையாளப்பட்டுவந்தது. அன்றிலிருந்து, விடுதலைப் போராட்டங்களின் வீரியத்தைச் சிதைக்கும் நோக்குடன், இத்தகைய கருத்துத் திணிப்புக்களை ஆக்கிரமிப்பாளர்கள் கையாள முனைகின்றனர்.


மேலெழுந்தவாரியாக நோக்கும் போது, போர் தொடர்பான இந்தக் கருத்துக்கள் சரியானதாகத் தென்பட வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் அவற்றைச் சொல்பவர்களின் நோக்கங்களை ஆராய்ந்து பார்த்தால், ஒரு சூழ்ச்சி அரசியல் அங்கிருப்பதைக் காணமுடியும். பொதுவாக, போரில் ஈடுபடும் அரசுகளின் படைகள் போருக்கு வேண்டிய முழு வசதிகளுடனும் தயார்நிலையில் இருக்கும்; போர் தொடங்கினால், குறித்தகாலஇடைவெளிக்குள் ஏதோ ஒரு நாடு வென்று போரை முடித்துவிடும். அதாவது, போர் ஆரம்பிக்கப்பட்ட தற்கான இலக்கை சொற்ப காலத்தில் அடைந்துவிட அல்லது அதில் தோல்வி அடைய அதிக வாய்ப்புகள் உண்டு.

ஆனால், ஒரு விடுதலைப்போராட்டம் அத்தகைய பரிமாணத்தில் நிகழமாட்டாது. ஒரு அரசின் படையைப்போல ஒரு விடுதலைச் சேனை, முழுமையாகவும் - தயார் நிலையிலும் நின்றபடி திடீரென விடுதலைப் போரைத் தொடுப்பது, சாத்தியமில்லை.

முதலில் விடுதலைக்கான போரின் விதை விழவேண்டும். பின் அது முளைத்து - துளிர்விட்டு - வளர்ந்து - கிளைபரப்பி - விடுதலைப் படை என்ற மரமாகி முழுமைபெற, பல பத்தாண்டுகள் செல்லும்.

ஒரு விடுதலைச் சேனை வளர்ந்து முழுமைபெற எடுக்கும் காலம் வரை விடுதலைப் போரும் நீளும். ஆக்கிரமிப்புப் படைக்கு நிகராக அந்த விடுதலைப் படை வளர்ந்ததும், போர் உச்சக்கட்டத்தை அடைந்து, பின்னர் குறுகிய காலத்தில் போர் முடிவடைந்துவிடும். வியட்னாமிலும் அதுதான் நடந்தது; சீனாவிலும் அதுதான் நடந்தது; எரித்திரியாவிலும் அதுதான் நடந்தது; தமிழீழத்திலும் அதுதான் நடக்கப்போகின்றது.

இந்த நிலையில், ஒரு விடுதலைச் சேனை தனது உயர் வளர்ச்சியைத் தொட எடுக்கும் அந்த நீண்ட காலத்தைத் தமக்குச் சாதகமாக எடுக்கும் எதிரி அரசுகள், போரின் வெற்றி தொடர்பான அவநம்பிக்கைக் கருத்தை போராடும் மக்கள்




மத்தியில் பரப்ப, அதைத் தகுந்த வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றன. வியட்னாமில் அமெரிக்கா அதைத்தான் செய்தது; தமிழீழத்தில் அதைச் செய்ய சிங்கள அரசும் முயல்கின்றது.

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை, ஜே. ஆரின் ஆட்சிக்காலம் வரை, தமிழீழ விடுதலைப் போரை, 'முடிவில்லா யுத்தம்' என்றோ அல்லது எவருமே வெற்றிபெற முடியாத யுத்தம்' என்றோ யாருமே பெரிதாக அழைக்கவில்லை. மாறாக, ''6 மாதத்தில் எல்லாவற்றையும் முடித்துவிடுவோம்'' என்றும், ''மிக விரைவில் புலிகளை அழித்து போரை வென்றுவிடுவோம்'' என்ற எதிர்வு கூறல்களையும், வெற்றிப் பிரகடனங்களையுமே, சிங்கள அரசியல்வாதிகளும் பேரினவாத சக்திகளும் கூறிவந்தன. ஆனால், சிங்கள தேசம் எதிர்பார்த்ததுபோல தமிழீழ விடுதலைப் போராட்டம் அழியவில்லை; மாறாக வளர்ந்தது.

இந்தப் போராட்ட வளர்ச்சியைக் கண்ணாரக்கண்டபடி ஜனாதிபதியாக வந்த திரு. பிரேமதாசா, ''போரில் தோற்றவர்களே உண்டு; வென்றவர்கள் இல்லை'' என்று, தனது ஆட்சிக்காலத்தில் கூறியிருந்தார். போர், மக்களுக்குக் கொடுத்த துயரங்களிலிருந்து பிறந்த ஞானம் அல்ல அது; மாறாக, விடுதலைப் போரின் வளர்ச்சி கொடுத்த விரக்தியில் - அல்லது இயலாமையில் - எழுந்த, உள்நோக்கம் கொண்ட கூற்றே அதுவாம்.

போர் என்று வந்துவிட்டால், அது - விடுதலைப் போரோ ஆக்கிரமிப்புப் போரோ - ஏதோ ஒரு தரப்பு வெற்றியையும், மறு தரப்பு தோல்வியையும் சந்திக்கும். பொதுவாக மக்களிடம் வேரூன்றிய ஒரு விடுதலைப் போர் - அது எத்தகைய பலம் வாய்ந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக நடந்தாலும் - தோற்றதாக வரலாறு இல்லை. இந்த நிலையில், ஒரு ஆக்கிரமிப்பு இராணுவம் தோல்வியடையும்போது, தனது தோல்வியையும் விடுதலைச் சேனையின் வெற்றியையும் மறைப்பதற்காக, போர் தொடர்பான மேற்குறித்த அவநம்பிக்கைத் தத்துவங்களைப் பிரச்சாரப்படுத்த முயல்கின்றது என்பதே உண்மையாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியைநோக்கிச்சென்றுகொண்டிருக்கின்றது; அதாவது, முடிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது; தனிநாட்டிற்கான ஒரு அரசு இயந்திரத்தைக் கட்டி அமைத்தபடி, புதிய தேசம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருக்கின்றது; புலிகளின் படைபலத்தால் அது சாத்தியமாகிக்கொண்டிருக்கின்றது! O

# அந்நியப் படைகள் வருமா?

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலைதீவு ஆகியவற்றைச் சேர்ந்த இஸ்லாமிய வீரர்கள் கணிசமான அளவில் இருப்பார்கள். இந்த இஸ்லாமியப் படை காஷ்மீரிலுள்ள இஸ்லாமியப் போராளிகளுடன் இணைந்தால் என்ன நடக்கும்? எனவே, இந்தியாவும் 'சார்க்' கூட்டுப்படையை விரும்பமாட்டாது.

இதேவேளை, 'சார்க்' நாடுகளைப் பொறுத்தளவில், 'நீயா அல்லது நானா சிறந்த பிச்சைக்காரன்?' என்ற நிலையே உள்ளது. இந்த நிலையில், 'சார்க் படை' களின் செலவை யார் பொறுப்பது? கூட்டுப் பொறுப்பேற்கும் ஒரு யோசனை சொல்லப்பட்டாலும், அதை ஒரு 'தண்டச் செலவாகவே' மற்றைய நாடுகள் பார்க்கும். இத்தகைய ஒரு பாரத்தைச் சுமக்க, உலகின் ஏழை நாடான பங்களாதேஷ் முன்வரமாட்டாது. அத்துடன் அங்கும் ஒரு விடுதலைப் போர் ('' பயங்கரவாதம் '') நடைபெறுகின்றது. 'சார்க் படை' அமைத்தால், அது தனது உள்நாட்டு விவகாரத்தில் தலையிடலாம் என்று பங்களாதேசும் அஞ்சும்.

இவ்வாறு ஒவ்வொரு நாடும் தத்தம் நலன்களைக் கருத்தில் எடுத்தபடியும் - ஆளை ஆள் நம்பாத சூழலிலும், 'சார்க்' என்ற ஒரு கூட்டுப்படை அமைவதை விரும்பமாட்டாது. இன்றைய சூழலில், சிறீலங்கா மட்டும்தான், 'சார்க்' ஆசையுடன் அலையும்; ஒரு நாடாக இருக்கமுடியும்; ஆனால் அது ஒரு அழகான கற்பனை மட்டுந்தான்! எனவே எமது மக்களே! 'சார்க் படை' என்ற சஞ்சலத்தை மனதிலிருந்து பிடுங்கி எறிந்துவிடுங்கள்.

இந்த இடத்தில், எமது போராட்ட வளர்ச்சியை மக்கள் நினைத்துப்பார்க்க வேண்டும். 2000 போராளிகளுடன் - சாதாரண ரக ஆயுதங்களுடன் - குறைந்த போர் அனுபவங்களுடன் நின்றிருந்த புலிப்படையுடன், ஒரு இலட்சம் இந்தியப் படைகள் மோதி தோல்விகண்டன; இது, எமது கண்முன்னால் நிகழ்ந்த உண்மை. அப்படியாயின் இன்று, பல்லாயிரம் போராளிகள் பெருகிவிட்ட புலிப்படையுடன் - பல்வேறு படையணிகளாக பரிமாண வளர்ச்சி பெற்றுவிட்ட புலிப்படையுடன் - மிக நவீன ஆயுதங்களுடனும் மிக நவீன போர் யுக்திகளுடனும், உலகே வியக்கும் போர்த்திறனுடனும் இருக்கும் புலிப்படையுடன் - ஒரு அந்நியப்படை, அது இந்தியாவோ அல்லது 'சார்க் படை'யோ மோத முன்வருமா? அப்படி முன் வந்தாலும் அவற்றால் வெற்றி பெறத்தான் முடியுமா?

'அது வந்தால் என்ன செய்வது இது வந்தால் என்ன செய்வது?' என்ற சிந்தனைகள் அவசியமானவைதான்; அதேவேளை, எதுவந்தாலும் இலட்சியப் போரை விடுவதில்லை என்ற உறுதியும் வேண்டும்.

இந்தியப்படை வந்து சென்றதன் பின், தமிழீழ விடுதலைப் போராட்டம், அனைத்து நிலைகளிலும் முன்னேற்றம் கண்டதை எவராலும் மறுக்க முடியாது. இப்போது இருக்கும் நிலையில் எமது போராட்ட வளர்ச்சி போதாது என்று சிறீலங்கா அரசு கருதினால், ஏதாவது ஒரு அந்நியப்படையை அது அழைக்கட்டும்!

ஒன்றுமட்டும் உண்மை: பலம் தான் எமது இனத்திற்கு வாழ்வு அளிக்கக்கூடியது. O

# 1987 ஒப்பந்தம்: இந்தியாவின் அழுத்தமும் தலைவரின் உடையாத உறுதியும்!

## 1987

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு 'தத்துக்' கழிந்த ஒரு முக்கிய வருடம்.

'ஒப்பறேசன் லிபறேசன்', இலங்கை-இந்திய ஒப்பந்தம், இந்திய - புலிகள் போர் என்று 'செக்குக்குள் போடப்பட்ட தேங்காய்க் கொப்பராக்கள் போல' - இந்திய, சிங்கள அரசுகளால் தமிழீழ விடுதலைப் போராட்டம் நசுக்கிப் பிழியப்பட்ட ஒரு 'சனியன்' ஆண்டு.

'இந்த வழியால்தான் செல்லவேண்டும்' என்று எமது மக்களுக்கு இந்திய - சிங்கள அரசுகள் 'திசைவழி' காட்ட முயன்றபோது ... 'இல்லை, இப்படித்தான் நாங்கள் செல்வோம்' என அடித்துக்கூறிவிட்டு, அனைத்துத் 'தத்து'க்களையும் ஏற்றிக்கொண்டு, போராட்டத் தேரைத் தலைவர் பிரபாகரன் செலுத்தமுயன்ற ஒரு முக்கிய ஆண்டு.

• • •

1987 ஜூலை மாதம்.

ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் கருத்தரித்த நாட்கள் அவை. இந்த ஒப்பந்தத்திற்கு தலைவரின் ஒப்புதல் தேவைப்பட்டது. அப்போது தலைவர் யாழ்ப்பாணத்தில் இருந்தார்.

தலைவரை இந்தியாவிற்குக் கூட்டிச்சென்று ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் கேட்பதுதான் இந்திய அரசின் எண்ணம். ஏனெனில், ஒப்புதல் தர மறுத்தால், அதை மிரட்டிப் பெறுவதற்கு தலைவரை இந்தியாவில் வைத்திருப்பதே சிறந்தது என, இந்திய அதிகாரிகள் எண்ணினர்.

இந்திய அரசுடன் முரண்பட்டுவிட்டு அதற்குத் தெரிவிக்காமல் யாழ்ப்பாணம் வந்துவிட்ட தலைவரை, மீண்டும் இந்தியாவிற்குக் கூட்டி வருவது எப்படி? இந்திய அதிகாரிகள் யோசித்தனர்.

இந்திய அதிகாரிகள் தயாரித்த ஒரு சூழ்ச்சித் திட்டத்துடன், கொழும்பில் இருந்த இந்திய தூதரகத்தின் அதிகாரியான திரு. பூரி யாழ்ப்பாணம் வந்து, தலைவரைச் சந்தித்தார்.

''ராஜீவ்காந்தி உங்களைச் சந்தித்து ஒரு முக்கிய விடயம் பற்றிக் கதைக்க விரும்புகின்றார்; நீங்கள் டெல்லிக்கு வர வேண்டும்'' என்று, தலைவரிடம் பூரி கேட்டுக் கொண்டார். ஆயினும் ஒப்பந்தம் பற்றி பூரி வாய்திறக்கவே இல்லை.

ஏதோ ஒரு சூழ்ச்சிவலை பின்னப்படுகிறது என்பதைத் தலைவர் ஊகித்தறிந்துகொண்டாலும், இந்தியாவின் பிரதமர் அழைக்கின்றார் என்பதனால் அதை மறுக்கவும் முடியவில்லை.

டெல்லி செல்ல தலைவர் இசைந்தார்.

23.07.1987 அன்று, இந்திய விமானப்படையின் எம்.ஐ.8 உலங்குவானூர்தி, சுதுமலை அம்மன் கோயிலுக்கு முன்னாலுள்ள வயல்வெளியில் இறங்கி, தலைவரை ஏற்றிக்கொண்டு பறந்தது. அங்கிருந்து விமானம் மூலம், தலைவர் டெல்லிக்கு கூட்டிச்செல்லப்பட்டார்.

டெல்லியில் 'அசோக் விருந்தினர் விடுதி'யில், தலைவரும் அவருடன் கூடச்சென்ற அன்ரன் பாலசிங்கம், லெப்.கேணல் திலீபன் ஆகியோரும் தங்கவைக்கப்பட்டனர். விடுதியின் உள்ளும் புறமும் விசேட கொமாண்டோ படையாகிய 'கறுப்புப் பூனைகளால்' நிரம்பி வழிந்தன. அங்கே மிகவும் சிறந்தமுறையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அதேவேளை, தலைவரும் அவருடன் கூடச்சென்றோரும், 'வெளியில் போக முடியாது', 'தொலைபேசிகளைப் பயன்படுத்த முடியாது' என்று கட்டுப்பாடுகளை விதித்தபின், ''டிக்சிற் வந்து உங்களுக்கு விளக்கம் தருவார்'' என்று கூறிவிட்டு இந்திய அதிகாரிகள் சென்றனர்.

ஒருசில மணிநேரத்தின் பின் டிக்சிற்றும் வெளிவிவகார அமைச்சின் சில உயர் அதிகாரிகளும் விடுதிக்கு வந்து, தலைவரைச் சந்தித்தனர்.

''இந்திய - இலங்கை அரசாங்கங்கள் இணைந்து தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத்திட்டத்தைத் தயாரித்துள்ளன'' என்று தனது பேச்சை ஆரம்பித்த டிக்சிற் அவர்கள், இந்திய - இலங்கை ஒப்பந்த நகலைத் தலைவரிடம் கொடுத்துவிட்டு,

''ஒரு மணி நேரத்திற்குள் இதை வாசித்துவிட்டு உங்களது பதிலைச் சொல்ல வேண்டும்'' என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார், ''இது இரு அரசாங்கங்கள் செய்த ஒரு ஒப்பந்தம். இதில் எவ்வித திருத்தங்களையும் நீங்கள் செய்ய முடியாது இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றே நாங்கள் (இந்தியா) எதிர்பார்க்கின்றோம்! '' என இடக்குத்தனமாகக் கூறிவிட்டு, டிக்சிற்றும் அவரது குழுவினரும் சென்றனர்.

டெல்லிக்குக் கூட்டிவரப்பட்டதன் நோக்கம் தலைவருக்கு அப்போதுதான் தெரிந்தது.

அவசரம் அவசரமாக ஒப்பந்த நகலைப் படித்தார்.

''ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 72 மணிநேரத்துக்குள் (03 நாட்கள்) புலிகள் இயக்கம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட வேண்டும்'' என்றும், (எந்தவித அதிகாரங்களுமற்ற) ''மாகாண சபைத் திட்டத்தை புலிகள் ஏற்கவேண்டும்'' எனவும் ஒப்பந்தம் கூறியது. அத்துடன், தமிழீழ மக்களை அரசியல் அநாதைகள் ஆக்கும் இன்னும் பல அம்சங்களும் அந்த ஒப்பந்தத்தில் இருந்தன.

சொன்னபடி சரியாக ஒரு மணி நேரம் கழித்து, டிக்சிற்றும் அவரது சகாக்களும் தலைவரிடம் வந்தனர்; வந்த உடனேயே அதிகாரத் தொனியுடன் டிக்சிற் உரையாடத் தொடங்கினார்.

''உங்களது முடிவைச் சொல்லுங்கள்'' என தலைவரிடம் கேட்டார்.

டிக்சிற்றைக் கூர்ந்து நோக்கியபடி நிதானத்துடன் தலைவர் சொன்னார்:

''எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்கமாட்டோம்.''

''ஏன் ஏற்கமுடியாது?'' சீற்றத்துடன் குரலை உயர்த்தியபடி டிக்சிற் கேள்வி எழுப்பினார்.

இந்திய மத்திய அரசின் சூழ்ச்சி அரசியலையும், டிக்சிற்றின் ஆத்திரமூட்டும் அணுகுமுறைகளையும் மனதிற்குள் புதைத்துவிட்டுத் தலைவர் விளக்கத் தொடங்கினார்:

''15 ஆண்டுகளாக நாங்கள் இரத்தம் சிந்திக் கட்டிவளர்த்த இந்த விடுதலை இயக்கத்தை, 72 மணிநேரத்திற்குள் கலைத்து விடவேண்டும் என்று இந்த ஒப்பந்தம் கூறுவதை, எம்மால் ஏற்க முடியாது.''

தெளிவாகவும் உறுதியாகவும் கூறிய தலைவர் அவர்கள் தொடர்ந்து சொன்னார்......

''ஒரு அரசியல் தீர்வு வரமுன் ஆயுதங்களைக் கீழே போடச் சொல்லியுள்ளீர்கள். எமது மக்களின் தற்பாதுகாப்புக் கருவிகளை எந்தவித உத்தரவாதங்களும் இல்லாமல் கீழே வைத்துவிட, நாங்கள் தயாராக இல்லை; அத்துடன், இது எமதுமக்களின் ஒப்புதல் இன்றி செய்த ஒரு உடன்பாடு; இதை நாம் ஏற்கமாட்டோம்.''

தலைவர் கூறி முடிக்க முன்னரே ஆத்திரத்துடன் டிக்சிற் சீறினார்......

''நீங்கள் ஏற்றுக்கொண்டாலும் சரி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சரி, இது நடைமுறைக்கு வந்தேதீரும்.''

ஒரு வன்ம உணர்வு முகத்தில் கொப்புளிக்க, குரலை உயர்த்தியபடி டிக்சிற் தொடர்ந்தார்,

''ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு ஆயுதங்களை ஒப்படைக்காவிட்டால, நாங்கள் எமது (இந்தியா) இராணுவத்தைக் கொண்டு உங்களது ஆயுதங்களைக் களைவிப்போம்.''

தலைவரையும் அவருடன் கூடச்சென்ற குழுவினரையும் ஒருமுறை பார்த்துவிட்டு, தனது சுட்டுவிரலை ஆட்டியபடி டிக்சிற் தொடர்ந்தார்:

''இப்போது எங்களுடைய பாதுகாப்



பிலதான் நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்'' என்று அதட்டிவிட்டு, தலைவரை நோக்கி வார்த்தைகளை அறுத்து - உறுத்துச் சொன்னார்:

''நீங்கள் இங்கிருந்து திரும்பிப் போவதற்கும் உத்தரவாதமில்லை.''

டிக்சிற்றின் மிரட்டல்களும், பண்பில்லாத சொற்பிரயோகங்களும், பகைமையை வெளிப்படுத்தும் முகபாவங்களும் தலைவர் பிரபாகரனைப் பொறுமையின் எல்லைக்கு இழுத்துச் சென்றன. ஆயினும், வழமைபோலவே தலைவர் நிதானத்தைக் கடைப்பிடித்தார்.

டெல்லிக்கு அழைக்கும்போதே, இத்தகைய ஒரு சூழ்ச்சி நடவடிக்கை பற்றிய சந்தேகத்துடனேயே தலைவர் டெல்லி சென்றிருந்தார். ஆயினும், அது இப்படி ஒரு கொடூர - துரோக வடிவத்தில் இருக்கும் என்று இப்போதுதான் தலைவருக்குத் தெரிந்தது.

'தனது உயிரைப் பணயம் வைத்து, அதற்குப் பதிலாக தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தைப் புதைகுழியில் இடமுனையும் இந்தியாவின் சதி நோக்கத்தை, தலைவர் உணர்ந்துகொண்டார்.

'தன்னுடைய உயிரா? தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தின் உயிரா? தமிழீழ மக்களது விடுதலைப் போராட்டத்தின் உயிரா?' என்ற கேள்விக்கு, எந்தவித குழப்பமும் இன்றி தலைவர் முடிவு எடுத்தார்; எடுத்த முடிவை நிதானமாக டிக்சிற்றுக்குச் சொன்னார்.

''என்னிடம் ஒரு கொள்கை இருக்கின்றது. அந்தக் கொள்கைக்காக சாவை அரவணைக்க நான் எப்போதுமே தயாராக இருக்கின்றேன்''

என்று கூறிவிட்டு, டிக்சிற்றைப் பார்த்தபடி தலைவர் சொன்னார்:

''அதற்காக நான் இங்கேயும் சாகத் தயார்; அங்கேயும் சாகத்தயார்; நீங்கள் செய்வதைச் செய்யுங்கள்.''

உறுதிமிகுந்த இந்த வார்த்தைகளை டிக்சிற் எதிர்பார்க்கவில்லைப் போலும்! அதேவேளை, தனது மிரட்டல் தலைவர் பிரபாகரனிடம் எடுபடவில்லை என்ற நமைச்சலும் ஒன்றுசேர, குரலைத் தாழ்த்தியபடி, எச்சரிப்பதுபோல் டிக்சிற் சொன்னார்:

''நாங்கள் பெரிய வல்லரசு; நீங்கள் ஒரு சிறிய ஆயுதக்குழு. யோசித்துக் கதைக்க வேண்டும். வீணாக அழிந்து போக நேரிடும்.''

அப்போது தலைவர் டிக்சிற்றை நோக்கி,

''பலம், பலவீனம் என்பது பிரச்சினை இல்லை; கொள்கைகள்தான் எங்களுக்கு முக்கியம் நாங்கள் கொண்ட கொள்கை களில் உறுதியாக இருக்கின்றோம்; அவ் வளவுதான்'' என்றுவிட்டு, எதையும் எதிர் கொள்ளும் உறுதியுடன் தலைவர் அமைதியாக இருந்தார்.

தான் கொண்டுவந்த அனைத்து ஆயுதங் களையும் பிரயோகித்துவிட்டு டிக்சிற் அவர்கள், இப்போது வெறுங்கையுடன் நின்றார். அவர் பயன்படுத்திய எந்த ஒரு ஆயுதமும், தலைவர் பிரபாகரனைத் தாக்கி நிலத்தில் வீழ்த்தவில்லை என்பதை அறிந்து மனம் புழுங்கியபடி இருந்த டிக்சிற் அவர்கள், அன்ரன் பாலசிங்கத்தைப் பார்த்து, ''கலந்தாலோசித்து முடிவெடுங் கள்'' என்று எச்சரிக்கும் தொனியில் கூறி விட்டு, தன் குழுவினருடன் வெளியேறினார்.

அதைத் தொடர்ந்து வந்த இரண்டு நாட் களிலும், இந்திய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் 'றோ' அதிகாரி கள், 'ஐ.பி.' எனப்படும் உள்ளூர் புலனாய்வு அதிகாரிகள் என்று பலரும் தலைவரிடம் வந்து, ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லி எச் சரிக்கை செய்தும், ஆசைகாட்டியும் பார்த்தார் கள்; எதுவும் சரிவரவில்லை.

இந்த நிலையில், வேறொரு துருப்புச் சீட் டைப் பயன்படுத்தி தலைவரது உறுதிப்பாட் டைக் குலைக்க, இந்திய அதிகாரிகள் திட்ட மிட்டனர்.

அதாவது தலைவருக்கும் அப்போது தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவி வகித்த எம். ஜி. ஆருக்கும் இடையில் இருந்த நட் பைப் பயன்படுத்தி, அதைச் சாதிக்க முயன்றனர்.

எம்.ஜி.ஆரை டெல்லிக்கு அழைத்த டிக்சிற், அவரையும் கூட்டிக்கொண்டு 'அசோகா' விடு திக்குச் சென்று, தலைவரைச் சந்தித்தார்.

தலைவர் பிரபாகரனுக்கு முன்னால் வைத்து, எம்.ஜி.ஆருக்கு டிக்சிற் நிலைமையை விளங்கப் படுத்தி, ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி தலைவருக்கு அறிவுரை சொல்லும்படி கேட்டுக் கொண்டார்.

அதே வேளை, 'ஏன் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாது?' என்பதை, டிக்சிற்றின் முன்னிலையிலேயே, தலைவர் எம்.ஜி.ஆருக்கு விளங்கப்படுத்தினார்.

இரு பகுதியினரதும் விளக்கங்களைச் செவி மடுத்த எம்.ஜி. ஆர். சிறிது நேரம் சிந்தித்த படி இருந்துவிட்டு, டிக்சிற்றிடம் கூறினார்.

''நான் பிரபாகரனுடன் தனிமையில் கதைக்க விரும்புகிறேன்.''

அதற்கு உடன்பட்ட டிக்சிற், எழுந்து வெளியே நடக்கத்தொடங்கினார். டிக்சிற் வெளியே போவதைப் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு, கண்களை விட்டு மறைந்ததும், தலைவர் பிரபாகரனை நோக்கி எம்.ஜி. ஆர். திரும்பினார்.

'எம். ஜி. ஆர். என்ன சொல்லப்போகின் றாரோ? இந்திய அரசுக்கு சார்பாகக் கதைத்தபடி ஒப்பந்தத்தை ஏற்கச்சொல்லி வலியுறுத்தப் போகின்றாரோ? அதை மறுதலித்து, எனது மக் களின் நலன்தான் எனக்கு முக்கியமென வலி யுறுத்திச் சொல்லும்போது, எமக்கிடையில் உள்ள நட்பு விரிசல் அடையுமோ?' என, தனக் குள் பலவாறாகச் சிந்தித்தபடி தலைவர் காத் திருந்தார்.

தலைவரைப் பார்த்து ஒரு புன்சிரிப் பொன்றை உதிர்த்துவிட்டு, தனது கரகரத்த குரலைச் சரிப்படுத்துவதற்காக ஒருமுறை செருமி விட்டு எம். ஜி. ஆர். சொன்னார்,

''நீ எந்த முடிவை எடுக்கின்றாயோ அதைத்தான் நான் ஆதரிப்பேன்.''

நறுக்காகக் கூறிவிட்டு தனது இருக்கையை விட்டு எழுந்த அந்தப் பெரும் மனிதர், உற் சாகமாக வெளியே சென்றார்.

எல்லா முயற்சிகளும் தோல்வியில் முடிந்த தால் இறுதியில், தலைவர் பிரபாகரனை தானே நேரில் சந்திப்பதென, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தீர்மானித்தார். o

# தாயகத்தை காதல் செய்..

அட பைத்தியக்காரக் கவிஞனே!
தாயகத்தை எப்படியடா காதலிக்க முடியும்?
பெண்ணை ஆணும்
ஆணைப் பெண்ணுமே ஆராதிக்க முடியும்.
மண்ணுக்கு மாலையிட முடியுமா?
கட்டித்தழுவி முத்தமிட முடியுமா?
தாயகத்தைக் காதலிக்கச் சொல்லும் கவிஞனே!
உனக்குப் புத்தியென்ன பேதலித்துவிட்டதா?

• • •

உண்மைதான்.
அன்னைபூமி மீது எனக்கு அளவற்றகாதல்
எப்படியென்று எடுத்துச் சொல்லமுடியாது
அது கற்பனை கடந்தது.
என் தாய்மடி எத்தனை அழகு?
காலை சேலைகட்டிவந்து
பூச்சூடிப் புன்னகைக்கும் போது
காணக் கோடிவிழிகள் வேண்டும்.
மாலைவந்து மயக்கும் எழிலில்
என்மனம் வசமிழந்து போகும்
இங்கு வேர்பிடித்த ஒவ்வொரு புல்லையும்
நான் விரும்புகின்றேன்
விரிந்து கிடக்கும் பரந்தவயல் வெளிகளையும்
வந்து கரை தழுவி
தாயவள் சேலை நனைத்து விளையாடும்
கடலையும் நான் காதலிக்கின்றேன்.
வாசமற்ற தென்றாலும்
பூவரசம் பூக்களை நான்
பெரிதும் விரும்புகின்றேன்.
பனைகளே எனது கற்பனைச் சுனைகள்

தென்தமிழீழத்தின் திசையை வணங்குவேன்
மட்டக்களப்பின் மடியில் தவழ்வேன்
அங்கு
முழுநிலாக் காலத்தில்
களத்து மேட்டில் கேட்கும் பாட்டும்
கும்மியும், குரவையும்
அம்மானையும் வசந்தன் பாட்டும்
எனக்கு இறக்கை கட்டிப் பறக்க வைக்கும்



## உலைக்களம்

**வியாசன்**

முறுக்கேறிய இராவணன் பூமி
திருக்கோணமலை.
அது அழகின் சிகரம்
நிலத்தின் முலையென நிமிர்ந்த
கோணேசர் மலைக்கு
பின்னேர வெயில்
'வாணிஸ்' பூசும்
தம்பலகாமத்து நெல்வயல்களில்
வெட்டியடுக்கிய சூட்டின் வாசம்
மூக்கு நுனியை முத்தமிடும்போதே
நாக்கில் நீரூறும்.
பச்சையரிசிச் சோறு படுருசி.
பன்குளத்துத் தயிருக்கு எதுநிகர்?

வன்னி மண்ணுக்கு என்ன குறை?
கொம்புத்தேனும்
பாலைப் பழக்காலத்துப் பன்றிக் கொழுப்பும்
நந்திக் கடலின் விராலும்
நாயாற்றுப் பாலத்து நண்டும்
உண்டு மகிழ்ந்தவனுக்கே உண்மை தெரியும்

''வங்கம்மலி கின்றகடல் மாதோட்டம்''
எங்களது என்ற
தேவாரப் பாட்டைக் காதோரம் ஏற்று
பாலாவியின் கரையில் பாடு;

காற்றில் கலந்து உலகமெங்கும் உலாவரட்டும்
தாயகத்தைக் காதல் செய் என்றேன்.

நிலத்தைக் காதலிப்பது எப்படியென்று
நீ என்னைக் கேட்கிறாய்.
தமிழனே!
தாய் மடியில் நீ புரண்டெழவில்லை
அன்னை மண்ணை அன்பு செய்யவில்லை
தாயகத்தைக் காதலிக்கவில்லை
அதனாற்தானே
ஆறுகோடி தமிழர்கள் இருந்தும்
உனக்கொரு 'தனிவீடு' கிட்டவில்லை.
அகதியாகி
எத்தனை தெருக்களில் அலைகின்றாய்
இரவற்திண்ணையிற்தானே
இன்றும் படுக்கின்றாய்
மூக்குச் சீறக்கூடப் பயந்து
பேச்சிழந்து கிடக்கின்றாய்
பகைவனின் பாதணிகளுக்குக் கூட
பூசை செய்கின்றாய்
குடங்கிக் குடங்கிக் கூனாகிப் போனாய்
அட தமிழனே!
தாய் நிலத்தைக் காதல் செய்துபார்
உன் மேனியிலிருந்து பன்னீர் வீசும்
நரைத்தமயிர் கூடக் கறுக்கும்
ஆயிரம் கோடிச் சூரியப் பிரகாசம்
உன் கண்ணிலிருந்து வீசும்
நீ எடுத்துவைக்கும்
ஒவ்வொரு காலடிக்குள்ளேயும்
நிலம் கசிந்து நீரூறும்

சீரிமலைக் கேணியை
யாரிடமோ கொடுத்துவிட்டு
தாயகத்தைக் காதலிப்பது எப்படியென்று
என்னிடம் கேட்கின்றாய்

தாயகம் பேசாது
ஓரக்கண்ணால் வெட்டி உருவேற்றாது
கடிதம் எழுதாது
கட்டியணைத்து முத்தமிடாது
இந்த நான்கும் இல்லையென்றால்
காதலிக்க முடியாதா?
எந்தப் பேயன் சொன்னவன்?
தாயகம் என்தாய்
தாயகம் என்சக்தி
தாயகம் என்மூச்சு
வேறொருவன் வீட்டில் விருந்தாளியாக
பட்டுவேட்டியுடன் இருப்பதிலும் பார்க்க
சொந்த வீட்டில்
கோவணத்துடன் இருப்பதே சுகம்
இறந்தபின்னர் என்னை எரிக்கக்கூடாது
ஏன்தெரியுமா?
என்தாயகம்
எரிகாயங்களுக்கு உள்ளாகக்கூடாது
என்னைப் புதைப்பதையே விரும்புகின்றேன்.
புதைக்கும் போதும்
புற்களின் வேரறுந்து போகாமல்
குழிவெட்டுங்கள்
உப்புப் போட்டுப் புதையாதீர்
நிலம் உவராகிவிடும்
மண்போட்டு மூடினால் போதும்
மழைபெய்ததும்
வேர்கள் துளிர்த்துக்கொள்ளும்
என்மண்ணில் நிற்கும் போதுதான்
எனக்கு இறக்கை முளைக்கிறது
உனக்கும் அப்படித்தான்
உணர்ந்து கொள்

ஒருபெண் உன்னையும்
நீ ஒரு பெண்ணையும்
அல்லது
ஒரு ஆண் உன்னையும்
நீ ஒரு ஆணையும்
காதலிப்பது உன் உரிமை
ஆனால்,
மண்ணைக் காதலிப்பதே உன்னதம்
தமிழனே!
தாயகத்தைக் காதல் செய் ! o

# இதுதான் சிங்கள தேசத்தின் வரலாற்று இயல்பா?

கண்டி கோட்டை, யாழ்ப்பாணம் என்று இலங்கைத்தீவில் இறைமையுள்ள மூன்று அரசுகள் இருந்த காலம். அப்போது கோட்டை இராச்சியத்தை புவனேகபாகு என்ற சிங்கள மன்னன் ஆண்டு வந்தான். இலங்கைத்தீவின் கரையோரப் பகுதிகள் சிலவற்றில் போர்த்துக்கேயரின் பிடி இறுகத் தொடங்கிய நேரம்.

புவனேகபாகுவின் கோட்டை அரசுக்குள் பிரச்சினைகள் எழுந்தன. தனது உடன்பிறந்த சகோதரர்களுடன் புவனேகபாகு சண்டையிட்டுக் கொண்டிருந்தான். இந்தவேளையில் தனது ஆட்சி அதிகாரத்தைத் திடப்படுத்திக்கொள்வதற்காக, போர்த்துக்கேயரின் உதவியைப் புவனேகபாகு நாடினான். கோட்டைத் தலைநகருக்கு போர்த்துக்கேய படை வந்தது; புவனேகபாகுவிற்கு உதவிபுரிந்து அவனது சகோதரர்களைத் தோற்கடித்தது. கதை அத்துடன் முடியவில்லை. கோட்டை இராசதானியின் அரசுரிமை, புவனேகபாகுவிற்குப் பின்னர் போர்த்துக்கேயருக்கே சென்றடைய வேண்டும் என்று. புவனேகபாகுவின் கையாலேயே போர்த்துக்கேயர் உயில் - அதாவது மரணசாசனம் - எழுதுவித்தார்கள்.

இவ்வாறுதான் சிங்களவர்களின் கோட்டை இராச்சியம் அந்நியரிடம் பறிபோனது. இனி, கண்டி இராச்சியத்தின் கதைக்கு வருவோம்.

போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம் முடிவடைந்த பின், பிரித்தானியர் காலம் வந்தது. அப்போது, கண்டி இராச்சியத்தைத் தவிர இலங்கைத் தீவின் அனைத்துப் பகுதிகளையும், பிரித்தானியர் ஆக்கிரமித்து வைத்திருந்த காலம்; கண்டியைக் கைப்பற்ற முயன்று பிரித்தானியர் தோற்ற நேரம். அந்த நேரத்தில், கண்டி மன்னனான சிறீவிக்கிரம ராசசிங்கனுக்கும் கண்டிப் பிரதானிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் வெடித்தன.

கண்டி மன்னனுக்கு எதிராகச் சதித்திட்டம் ஒன்றைத் தீட்டிய கண்டிப் பிரதானிகள் பிரித்தானியப் படையின் உதவியை நாடினர்; பிரித்தானியர் உடன்பட்டனர். கண்டிப் பிரதானிகளின் துணையுடன், நுழையக் கடினமான கண்டி இராச்சியத்திற்குள் இலகுவாக நுழைந்த பிரித்தானியப் படைகள், கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றின. தமக்குத்தான் ஆட்சி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்று கனவுகண்டுகொண்டிருந்த கண்டிப் பிரதானிகளுக்கு, பலத்த ஏமாற்றம் கிடைத்தது. ஏற்கெனவே கைப்பற்றிவைத்திருந்த பகுதியுடன் கண்டி இராசதானியையும் இணைத்து, தீவின் முழு ஆட்சி அதிகாரத்தையும் பிரித்தானியர் தமது கைகளில் எடுத்துக்கொண்டனர்.

இவ்வாறுதான், சிங்களவர்களின் கண்டி இராச்சியம் அந்நியரிடம் பறிபோனது. அந்நியப் படைகளை உதவிக்கு அழைக்க முயன்று தமது இராச்சியங்களைப் பறிகொடுத்ததுதான், சிங்கள தேசத்தின் வரலாறு.

அடுத்ததாக, இந்தியப் படைகளை அழைத்த ஜே. ஆர். அரசின் செயலைப் பார்ப்போம்.

தமிழரின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்கும் எண்ணத்துடன், 1987 ஆம் ஆண்டு, சிறீலங்கா ''மன்னர்'' ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, இந்தியப் படைகளை இலங்கைத் தீவிற்கு அழைத்தார்.

இந்தியப் படை தமிழர் படையுடன் பொருதியது; 8000இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களை இந்தியப் படை கொன்றது.

ஆனால், இந்தியப் படையை அழைத்ததால் வேகங்கொண்ட ஜே. வி. பி. கிளர்ச்சியால், சுமார் 60,000 சிங்களவர்கள் தங்களைத் தாங்களே கொன்றுதள்ளினர்.

அந்நியப் (இந்திய) படையை அழைத்தவர்கள் இழந்தது 60, 000 மக்களை; அதை எதிர்த்துப் போராடியவர்கள் இழந்தது, 8,000 மக்களை.

அதுமட்டுமல்ல, இந்தியப் படைகளை போரில் தோல்வியுறச் செய்த தமிழர் படை, இறுதியில், இந்தியப் படைகளை இலங்கை மண்ணைவிட்டு வெளியேற்றியது. அதாவது, முன்னைய வரலாற்றைப் போல, இலங்கைத்தீவில் அந்நியர் ஆட்சி நடைபெறாமல் போய்விட்டது. அதற்குப் பிரதான காரணம் - சிங்களவர் தேசமல்ல; தமிழர் படையே ஆகும்.

அந்நியரின் குடைக்குள் இளைப்பாற முயன்று தன்னிடம் இருந்த குடையையும் இழந்த வரலாற்றை, கண்டிப் பிரதானிகளின் வழித்தோன்றலான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா தெரிந்துகொள்வது, சிங்கள தேசத்திற்கு நல்லது அல்லவா!

இத்தகைய உணர்த்தல் ஒன்றை, 1990ஆம் ஆண்டு, ஜே. வி. பி. சார்புப்பத்திரிகையான கினிபுற[ தீப்பொறி] நினைவூட்டி இருந்தமை குறிப்பிடத்தக்கது! ○

## வீறு நடைபோடும்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுவித்துள்ளது. அச்சத்தின் காரணமாக விமானிகள் பலர் படையை விட்டோட முயல்கின்றனர். இவர்கள் நாட்டை விட்டோடாது தடுப்பதற்காக, விமான நிலையங்கள் உசார்படுத்தப் பட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. பல இலட்சம் ரூபா செலவளித்துப் பயிற்றப் பட்ட ஒரு விமானி பணியை விட்டோடுவது என்பது, சாதாரண விடயம் அல்ல.

அபாயத்தைச் சந்திக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, விமானிகள் விமானம் ஓட்ட மறுப்பதை விட்டுக்கொடுத்தால், பின்னர் தரை - கடற்படைகளும் அபாயத்தைக் காரணமாகச் சொல்லி, தரை - கடல் நடவடிக்கைகளில் ஈடுபட மறுக்கும்போது நிலைமை எப்படி இருக்கும் என்று அரசு அஞ்சுகின்றது. ஆயினும், அத்தகைய விமானிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க அரசு தயங்குவதற்கும் ஒரு காரணி உண்டு. அதாவது, இராணுவத்தினரைப் போல அல்லது கடற்படையினரைப் போல, வான்படையின் அங்கத்தவர்கள சாதாரண ஆட்கள் அல்ல; அவர்களில் பெரும்பாலானோர் சிங்கள உயர்குழாத்தைச் சேர்ந்தவர்கள்; ஆளும் வர்க்கத்தின் அல்லது அதிகார பீடத்தவரின் பிள்ளைகள் அல்லது உறவினர்கள். எனவே, சாதாரண இராணுவச் சிப்பாய்க்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளை, இந்த உயர்குழாத்தின் பிள்ளைகள் மீது எடுக்கச் சந்திரிகா அரசு தயங்கும்!

இதேவேளை, புலிகள் இயக்கம் தற்போது பெற்றுள்ள இராணுவ மேல்நிலைக்கு 'நீதான்' காரணம்- 'இல்லை நீதான் காரணம்' என்று, சிறீலங்காவின் தரை - கடல் - ஆகாயப் படைகள் தங்களுக்குள்ளேயே கருத்து மோதல்களை நடாத்திக்கொண்டிருக்கின்றன. பெருமளவு நிலங்களைக் கைப்பற்றினால் புலிகளின் பலத்தைக் குறைக்கலாம் என்று, வான்படை, தரைப்படையைக் குற்றம் சாட்டுகின்றது; கடற்பலம் இருந்தால்தான் தரையைக் கைப்பற்றலாம் என்று, கடற்படைமீது தரைப்படை குற்றம் சாட்டுகின்றது; வான் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினால்தான் ஒரு மரபுவழிப் போரை நடத்தமுடியும் என்று, வான்படைக்கு எதிராக ஏனைய இரு படைகளும் குற்றம் சாட்டுகின்றன.

இது ஒருபுறம் இருக்க, வடக்கு கிழக்கில் அரசுப் படைகள் சந்தித்துள்ள இராணுவ நெருக்கடிகள், தென்னிலங்கையிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. வடபுலத்தில் நிலைகொண்டுள்ள சுமார் 30,000 படையினரின் பெற்றோரும் உறவினர்களும், ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் இராணுவத் தலைமையக அதிகாரிகளிடமும் 'தமது பிள்ளைகளது நிலை என்ன? என்று கேள்வி எழுப்பி, தொந்தரவு கொடுத்தபடி உள்ளனர்.

இதேவேளை, தமிழரின் விடுதலைப் போரை நசுக்க சிங்களப் படைகளால் இயலாது என்ற ஒரு எண்ணமும், சிங்களப் பேரினவாதிகளிடம் குடிகொள்ளத் தொடங்கியுள்ளது இதன்காரணமாக, அந்நிய அரசுகளின் உதவியைப் பெற்றுப் புலிகள் இயக்கத்துடன் போரிட வேண்டும் என்ற கருத்தும், அங்கே




வலுவடைந்து வருகின்றது. ஆயினும், கண்ணை மூடிக்கொண்டு வந்து பாழ்க்கிணற்றுக்குள் விழ, எந்த ஒரு நாடுமே தயாராக இருக்கமாட்டாது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது ஆயுதங்களைச் சிறீலங்கா அரசுக்கு விற்பனை செய்யவும், அத்துடன் ஆலோசகர்கள் என்ற பெயரில் ஆட்களை அனுப்பி - கெரில்லா எதிர்ப்புப் பயிற்சிகளைப் பெறவுமே அந்நிய நாடுகள் ஆவலாக இருக்கின்றன.

'சமாதானத்தை நிலைநிறுத்தப் போகின்றேன்' என்று ஆணை கேட்டு ஆட்சிபீடமேறிய சந்திரிகா அம்மையார், இப்போது, பெரும் போரை நடாத்த கங்கணங் கட்டியிருக்கின்றார்.

சமாதானத்தைக் கொண்டுவருவதில் அவர் காட்டிய அக்கறையையும், செயல் வேகத்தையும் - போரை நடாத்துவதில் அவர் காட்டிவரும் அக்கறையுடனும், செயல் வேகத்துடனும் ஒப்பிட்டுப் பார்த்தால், சந்திரிகா அம்மையாரின் விருப்பம் எது என்பதை அறிந்துகொள்ளலாம்.

பேச்சுவார்த்தை முறிவுக்காக புலிகளைக் கண்டனம் செய்த மேற்கு நாட்டு அரசுகளும் நிறுவனங்களும் தற்போது, சந்திரிகாவின் ''சமாதான வேட்கை'' பற்றி, மெது மெதுவாகப் புரிந்துகொள்ளத் தொடங்கியுள்ளன! O

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்